உளவுத் துறை தோல்விகளையும், (மும்பையிலும் இதர பல இடங்களிலும் நடந்த) பயங்கரவாதச் செயல்களைத் தடுக்கத்தவறியதையும் மூடிமறைப்பதற்காக, சட்ட அமலாக்கத்திற்குப் பொறுப்பான இந்த பாதுகாப்பு அமைப்புகள் பெரும்பாலும் அப்பாவி மக்களைப் பிடித்து வைக்கின்றன, சில நேரங்களில் திரைமறைவு உலகத்துடன் தொடர்பில் இருக்கக்கூடியவர்களை (பிரதானமாக முஸ்லிம்களை) பிடிக்கின்றன. அவர்களையெல்லாம் மிகவும் அச்சத்திற்குரிய பயங்கரவாதிகள் என்று சித்தரித்து, மக்கள் கவனத்தை ஈர்க்க முயல்கின்றன. 2004ல் குஜராத்தில் காவல்துறை உயரதிகாரிகளால் ஷோராபுதீன், இஸ்ரத் ஜெஹான், அவரது உதவியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபோது அதனை அன்று மாநில அரசும் ஊடகங்களும் பாகிஸ்தானிய பயங்கரவாதிகளுக்கு எதிரான ஒரு பெரும் தாக்குதல் நடவடிக்கை என்பதாகச் சித்தரித்தன. இப்போதோ அந்தத் தாக்குதல்கள் போலியான மோதல்கள்தான் என்றும், கொல்லப்பட்டவர்களுக்குப் பாகிஸ்தானோடு எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதும் தெரியவந்திருக்கிறது! ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகரில் 2009 மே 13 அன்று அடுத்தடுத்து நடந்த குண்டுவெடிப்புகள் தொடர்பாக 11 முஸ்லிம் இளைஞர்களை அந்த மாநில காவல்துறையின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் (ஏடிஎஸ்) கைது செய்தனர். அந்த 11 பேரும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் (சிமி) உறுப்பினர்கள் என்று ஏடிஎஸ் கூறியது. ஜெய்ப்பூர் குண்டுவெடிப்புப் புதிரைத் தீர்த்து வைத்ததற்காக ஏடிஎஸ் படைக்கு மாநில முதலமைச்சர் அஷோக் கேலாட், மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் இருவரும் பாராட்டுத் தெரிவித்தனர். ஆனால் பின்னர், அவர்கள் சிமி அமைப்பின் உறுப்பினர்கள் அல்ல என்றும் எந்த பயங்கராவாதச் செயல்களிலும் ஈடுபட்டதில்லை என்று அறிவித்த விசாரணை நீதிமன்றம், 2011 டிசம்பர் 9 அன்று அந்த 11 இளைஞர்களையும் விடுதலை செய்தது. கேலாட், சிதம்பரம் இருவருக்கும் குறைந்தது அவர்களிடம் வருத்தம் தெரிவிக்கிற தார்மீகத் துணிச்சலாவது இருந்திருக்க வேண்டும்.

**அந்த பத்தாண்டு காலத்தில் சுமார் 78,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். பெரும்பாலும் போலியான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் பலர் நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேயில்லை. பல ஆண்டுகள் சிறையில் கழித்தபிறகு நீதிமன்றங்களின் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டவர்களில் 95 விழுக்காட்டினர் விடுவிக்கப்பட்டனர்.**

அந்த இளைஞர்கள் இத்தனை ஆண்டுகளை இழந்ததற்கும், அவர்கள் சந்தித்த சித்திரவதைகளுக்கும் அரசு எப்படி ஈடு செய்கிறது? முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இப்படிப்பட்ட எத்தனை அப்பாவிகள் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள்? (அசீமானந்த், ராணுவ அதிகாரி லெப்டினன்ட் கர்னல் பிரசாத் ஸ்ரீகாந்த்

புரோஹித் ஆகியோரது வழிகாட்டலில்) மாலேகாவுன் நகரிலும் மெக்கா மசூதியிலும் சம்ஜிவதா எக்ஸ்பிரஸ் ரயிலிலும் நடந்த தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்கள் இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்தான் என்பது அண்மையில் வெளிச்சத்துக்கு வந்தது. அப்படி வெளிவரும் வரையில் இந்திய உளவு அமைப்புகளும் பாராமிலிட்டரி அமைப்புகளும் பயங்கரவாதம் என்றாலே முஸ்லிம் சமூகத்துடன் மட்டுமே அடையாளப்படுத்தி வந்தன. இந்து வலதுசாரி பயங்கரவாதம் வளர்ந்து வருவதைக் கண்டுகொள்ளாமல் இருந்தன. அதன் மூலம் அந்த அமைப்புகளில் ஊறிப்போயிருக்கும் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான பாரபட்ச உணர்வுதான் வெளிப்பட்டது.

**அரசின் சட்ட அமலாக்கத் துறையினர் குறிவைக்கிற மற்றொரு பிரிவினர் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களாவர். இஸ்லாம் என்பது எப்படி பயங்கரவாதத்தோடு இணைத்துச் சொல்லப்படுகிறதோ அதே போல் இந்தத் துறையினர் மனித உரிமை என்றாலே அதை நக்சலிசத்தோடு இணைக்கிறார்கள்.**

சமூக ஆர்வலர்களது போராட்டங்களைக் குற்றச் செயல்களாக்குவதற்கு அரசு முயல்வதிலும் சமுதாயத்தின் சில பிரிவுகள் மீது உள்ள பகையுணர்வு வெளிப்படுகிறது. சத்திஷ்கர் மாநிலத்தில் மக்களறிந்த மருத்துவர் பினாயக் சென், உத்தர்கண்ட் மாநிலத்தில் பத்திரிகையாளர் பிரசாந்த் ராஹி, ஜார்க்கண்ட் மாநிலத்தில் நாட்டுப்புறக் கலைஞர் ஜீதன் மராண்டி – போன்றோர் நக்சலைட்டுகள் என்று முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களோ ஆட்சியதிகாரத்தில் இருந்த அரசியல்வாதிகள், ஊழல் பேர்வழிகளான வர்த்தக நிறுவனத்தினர், மூர்க்கத்தனமான காவல்துறையினர் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதை எதிர்த்தவர்கள். இவர்கள் பின்னர் ஜாமீன் அடிப்படையில் வெளியே விடப்பட்டார்கள் அல்லது வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (இவர்களில் மரண தண்டனை அளிக்கப்பட்டவரான மராண்டி 2011 டிசம்பர் 15ல் ராஞ்சி உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யபட்டார்) என்ற போதிலும் கூட, இவர்கள் அனைவருமே தாங்கள் செய்யாத குற்றங்களுக்காகப் பல ஆண்டுகளைச் சிறையில் கழிக்க வேண்டியதாயிற்று. இதே போல், பல ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 'தடா' கைதிகளில் பெரும்பாலோர் பின்னர் எல்லாக் குற்றச் சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். இப்படிப்பட்ட அனைவரின் அனுபவங்களும் இந்தியாவில் எந்த அளவுக்கு நீதியைத் தடம்புரளச் செய்யும் முயற்சிகள் நடக்கின்றன என்பதையே காட்டுகிறது. நீதிமன்றங்கள் இவர்களுக்கு ஜாமீன் அனுமதி அல்லது விடுதலை என நிவாரணம் அளித்தன என்றபோதிலும், இவர்களுக்கு எதிராக போலியான ஆதாரங்களைத் தயாரித்து, ஆண்டுக்கணக்காக இவர்களைச் சிறையில் அடைத்து, இவர்களது வாழ்க்கையையும் தொழில்களையும் சீர்குலைத்த சட்ட அமலாக்கத் துறையினர் மீது நீதிமன்றங்கள் தாமாக முன்வந்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசின் சட்ட அமலாக்கத் துறையினர் குறிவைக்கிற மற்றொரு பிரிவினர் மனித உரிமைச் செயல்–பாட்டாளர்களாவர். இஸ்லாம் என்பது எப்படி பயங்கரவாதத்தோடு இணைத்துச் சொல்லப்படுகிறதோ அதே போல் இந்தத் துறையினர் மனித உரிமை என்றாலே அதை நக்சலிசத்தோடு இணைக்கிறார்கள். சத்திஷ்கர் மாநிலத்தின் தண்டேவாடா நகரில், பள்ளிக் கண்காணிப்பாளராகப் பணிபுரிபவர் சோனி சோரி. பழங்குடியினப் பெண்ணான இவர் மனித உரிமை மீறல் பிரச்சனைகளைக் கையில் எடுப்பவர். இவரைக் காவல்துறையினர் கைது செய்தனர். அதை நியாயப்படுத்தி இந்திய காவல் பணி (ஐபிஎஸ்) அதிகாரி ஒருவர் கூறிய கருத்து, சட்ட அமலாக்கத் துறையினரின் மனப்போக்கிற்குச் சான்றாக இருக்கிறது. ''படித்த பழங்குடிப் பெண்கள் யாராக இருந்தாலும், ஆசிரியராகவே இருந்தாலும், அவர்களுக்கு மனித உரிமை என்ற வார்த்தைகள் எல்லாம் தெரியாது. நக்சலைட்டுகளோடு தொடர்பு இருப்பவர்கள் மட்டுமே இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவார்கள்,'' என்றார் அவர் (இண்டியன் எக்ஸ்பிரஸ், 12 அக்டோபர் 2011).

இந்தியாவின் சட்ட அமலாக்கத் துறைகளைச் சேர்ந்தவர்களது இந்த மனப்போக்கை, ஐ.நா. சிறப்புத் தொடர்பாளர் மார்கரெட் செகாக்கியா, மனித உரிமைக்காக வாதாடுவோரின் நிலைமை பற்றிய அறிக்கையில் கடுமையாக விமர்சித்திருக்கிறார். உண்மையறியும் குழுவில் பங்கேற்று இந்தியாவுக்கு வந்த அவர் தனது அறிக்கையில், மனித உரிமைச் செயல்பாட்டாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் நடத்தப்படும் விதம் குறித்துத் தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். ''மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் சட்டப்பூர்வமான முறையில் பணியாற்றியதற்காக அவர்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள், சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள், மோசமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள், காணாமல் போயிருக்கிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள், வேண்டும் என்றே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள், போலியான குற்றச்சாட்டுகள்

சுமத்தப்பட்டிருக்கிறார்கள், கண்காணிக்கப்– பட்டிருக்கிறார்கள்,'' என்று அவர் கூறியிருக்கிறார். ''மனித உரிமைப் பாதுகாவலர்களை நக்சலைட்டுகள் (மாவோயிஸ்ட்டுகள்), பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், உள்நாட்டுக் கலகக்காரர்கள், தேசவிரோதிகள் என்றெல்லாம் முத்திரை குத்துவது கண்டு நான் ஆழ்ந்த கவலை கொள்கிறேன்,'' என்றும் அவர் கூறியுள்ளார். அறிக்கையின் இறுதியில் அவர் இந்திய அரசு மனித உரிமைக்காக வாதிடுவோரைப் பாதுகாக்க வேண்டும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை வலுப்படுத்த வேண்டும், பொது பாதுகாப்புச் சட்டம், ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரங்கள் சட்டம் (ஏஎப்எஸ்பிஏ) ஆகிய சட்டங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைத்திருக்கிறார் (யுஎன் நியூஸ் சர்வீஸ், 21 ஜனவரி 2011).

## ராணுவமயமாக்கலை கைவிடக் கோரி மக்கள் இயக்கம்

காஷ்மீரானாலும், வடகிழக்கு மாநிலங்களானாலும் அல்லது மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளானாலும் அங்கெல்லாம் எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்துகிற பொது இயக்கங்கள், தனிப்பட்ட வெளிப்பாடுகள் ஆகியவற்றை இந்திய அரசு ராணுவக் கண்ணோட்டத்துடனேயே அணுகிவந்திருக்கிறது. இதனை பல்வேறு பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் (உதாரணமாக உலக பொது மன்னிப்பு அமைப்பு, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு) கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளன. ஐ.நா. சிறப்பு தொடர்பாளரின் ஆவணம் அத்தகைய அறிக்கைகளில் கடைசியாக வந்திருப்பதாகும். ஆனால் அந்த அமைப்புகளின் ஆலோசனைகளைக் கேட்டு, எதிர்ப்புத் தெரிவிப்போருடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டிற்கு வருவதற்கு பதிலாக மேலும் மேலும், போர் மனப்பான்மையுள்ள ராணுவ அமைப்பின் ஆலோசனைகளுக்கே இந்திய அரசு செவி மடுக்கிறது. ராணுவம்தான் தீர்மானிக்கிறது என்பதற்கு, காஷ்மீரிலிருந்து ஏஎப்எஸ்பிஏ சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று அந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஒமர் அப்துல்லா–வே கோரிக்கை விடுத்தும் கூட அதை ஏற்க இந்திய அரசு மறுத்துவருவதே சாட்சியாகும்.

வடபிரதேசத்திற்கான ராணுவ கட்டுப்பாடு தலைமை அதிகாரி ஜெனரல் கே.டி. பட்நாயக், அந்தச் சட்டத்தை விலக்கிக்கொண்டால் ராணுவத்தால் செயல்பட முடியாமல் போகும் என்று கூறியதைத் தொடர்ந்தே மத்திய அரசு அந்த சட்டத்தை விலக்கிக்கொள்ள மறுத்துவருகிறது (இண்டியன் எக்ஸ்பிரஸ், 4 நவம்பர் 2011). தேசப் பாதுகாப்பிற்கான உயர்மட்ட நடவடிக்கைக் குழுவிடம் இந்தியாவின் முப்படை தலைவர்கள் வைத்த கோரிக்கைகள், அரசின் கொள்கைகளை ராணுவமயமாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளின் அறிகுறிகளாக இருக்கின்றன. அவர்கள் பாதுகாப்புத் தொடர்பான கொள்கை முடிவுகளில் தங்களுக்கு ஒரு பெரும்பங்கு இருக்க வேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சகத்தில் தங்களுக்கு நேரடியாக பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர் (இண்டியன் எக்ஸ்பிரஸ், 4 நவம்பர் 2011)

**தேசியக் கொள்கைகளில் இவ்வாறு ராணுவ ஆதிக்கம் நுழைவதை முன்கூட்டியே தடுக்க வேண்டுமானால் இங்குள்ள இடதுசாரி அரசியல் சக்திகள், இதர சுதந்திர மனிதநேய சக்திகளுடனும் குடிமைச் சமூக அமைப்புகளுடனும் இணைந்து விழிப்புடன் செயல்பட்டாக வேண்டும்.**

பாகிஸ்தானில் நாடாளுமன்ற அமைப்பை ராணுவ தலைவர்கள் சீர்குலைக்க முடிகிறது. அதே பாணியில் இங்கேயும் தேசியக் கொள்கைகளில் இவ்வாறு ராணுவ ஆதிக்கம் நுழைவதை முன்கூட்டியே தடுக்க வேண்டுமானால் இங்குள்ள இடதுசாரி அரசியல் சக்திகள், இதர சுதந்திர மனிதநேய சக்திகளுடனும் குடிமைச் சமூக அமைப்புகளுடனும் இணைந்து விழிப்புடன் செயல்பட்டாக வேண்டும். திறனற்ற முறையில் செயல்படும் உளவு அமைப்புகளையும், மூர்க்கமாகச் செயல்படும் பாரா மிலிட்டரி அமைப்புகளையும் (பாரா மிலிட்டரி அமைப்புகளை இயக்குவது பெரும்பாலும் ராணுவ அதிகாரிகள்தான்). மேலும் மேலும் அரசு சார்ந்து வருவதை எதிர்த்தாக வேண்டும்.

போலி என்கவுண்டர்கள் பற்றிய உண்மைகள் அம்பலமானதைத் தொடர்ந்தும் பயங்கரவாதிகள் என்ற பெயரில் கைது செய்யப்பட்ட அப்பாவி மக்கள் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தும் இந்த அமைப்புகள் தங்களது நம்பகத்தன்மையை இழந்துவிட்டன. சட்ட அமலாக்க அமைப்புகளை புதுப்பித்து சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளும்படி, விதிகளை மீறுகிற அதிகாரிகள் மீது மனித உரிமை மீறல் குற்றத்திற்கான வழக்குகள் தொடுக்கும்படி இந்திய அரசை கட்டாயப்படுத்துகிற பெருந்திரள் மக்கள் இயக்கங்களைக் அணிதிரட்டவேண்டிய தருணம் வந்துவிட்டது.

**ஆதாரம்: *Economic & Political Weekly (EPW), January 7, 2012***

# சத்திஸ்கர்: காவல் நிலையத்தில் ஆதிவாசி மரணம்

## தற்கொலை என்கிறது போலீஸ், சித்திரவதை அறிகுறிகளைக் காட்டுகிறது மருத்துவ அறிக்கை

. நான்கு காவலர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்: காவல்துறை
. சிஆர்பிஎப் முகாமில் கொடூரமாகத் தாக்கப்பட்டார் மாரா: முன்னாள் எம்எல்ஏ

**அமாம் சேத்தி**

மாவோயிஸ்ட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள தண்ட்டேவாடா வட்டாரத்தைப் பிரித்துப் புதிதாக சுக்மா மாவட்டம் உருவாக்கப்பட்டிருப்பதையொட்டி ஒரு பொதுநிகழ்ச்சியில் சத்திஸ்கர் முதலமைச்சர் ராமன் சிங் உரையாற்றிய அதே நாளில், சுக்மா நகரத்தில் ஒரு காவல் நிலைய சாவு நிகழ்ந்தது. இது, தீவிரவாதத்திற்கு எதிரான மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் பின்னணியில், நம்பிக்கையிழந்த பழங்குடி மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது எவ்வளவு கடினமானது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கோண்ட்ரே கிராமத்தைச் சேர்ந்த போடியம் மாரா ஜனவரி 13 அன்று இரவு காவல் நிலையத்தில் மரணம் அடைந்தார். ஒரு நீதிபதியின் முன் நிறுத்தப்பட்ட அவரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு ஆணையிடப்பட்ட சில மணி நேரங்களில் அவர் மரணம் அடைந்தார். “காவல் அறையில் ஒரு படுக்கை விரிப்பைப் பயன்படுத்தி மாரா தூக்குப் போட்டுக்கொண்டார். நான்கு காவலர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்,” என்று காவல்துறை அதிகாரி ஒருவர் கூறினார். “அவர் தண்டேவாடா சிறைக்கு மாற்றப்படுவதாக இருந்தார். ஆனால், 13ம் தேதி இரவு மிகவும் தாமதமாகிவிட்டதால் அவர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தார்,” என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மத்திய தயார்நிலை காவல் படை (சிஆர்பிஎப்) தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி.) பங்கஜ்மிஸ்ரா இவ்வாறு கூறினார்: “ஜனவரி 12 அன்று சிஆர்பிஎப் நடவடிக்கையின்போது மாரா பிடிபட்டார். மறுநாள் காலையில் அவரை காவல்துறையிடம் ஒப்படைத்துவிட்டோம். எங்களது சோதனை நடவடிக்கையில் சந்தேகத்துக்குரிய நபர் பிடிபடுவாரானால் அவரை உள்ளூர் காவல்துறையினரிடம் ஒப்படைத்துவிடுவோம்.”

ஆனால், சில காவலர்களும் அரசியல் வேறுபாடின்றி பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். மாராவை பல நாட்களுக்கு முன்பே சிஆர்பிஎப் பிடித்துச் சென்றுவிட்டது, உள்ளூர் காவல்துறையிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக அவரைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்திருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளை சிஆர்பிஎப் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் மறுத்துள்ளனர்.

“சுக்மா நகரத்திற்கு வெளியே சிஆர்பிஎப் காவலர்கள் ஜனவரி 9 அன்று மாராவைப் பிடித்துச் சென்றனர். பீடி இலைகள் பறித்துக்கொடுத்ததற்காகப் பெற்ற காசோலையைப் பணமாக மாற்றுவதற்காக அவர் நகரத்திற்கு வந்தபோது அவரை சிஆர்பிஎப் ஆட்கள் பிடித்துச் சென்றார்கள்,” என்றார் சத்திஸ்கர் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும் கோன்டா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கோவாசி லக்மா. சுக்மா நகரம் அந்தத் தொகுதியோடு இணைந்ததுதான். “காவல் பொறுப்பாளர் முதல் மேல்மட்ட அதிகாரிகள் வரை நான் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு அவரை விடுவிக்க முயன்றேன். ஆனால், அவர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுவிட்டார்.அவரது பிறப்புறுப்பில் சிஆர்பிஎப் ஆட்கள் மின்சாரத்தைச் செலுத்தினர். அவரது மலத்துவாரத்தில் பெட்ரோல் ஊற்றினர்,” என்றார் கோவாசி. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரும் கோன்டா தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மணிஷ் குஞ்ஜாம் தொலைபேசி மூலம் இவ்வாறு கூறினார்: “மாரா தற்கொலை செய்துகொண்டதாகக் காவல் துறையினர் கூறுவது பொய். சுக்மா நகர சிஆர்பிஎப் முகாமில் அவர் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும்.”

‘இண்டியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டின் ஜனவரி 16ம் தேதி இதழில் வெளியான செய்தியின்படி, “மாராவின் ஆண்குறியிலும், மலத்துவார உள்பகுதியிலும் வீக்கம் இருந்தது” என பிரேதப் பரிசோதனை அறிக்கை உறுதிப்படுத்துகிறது. மாராவின் பிறப்புறுப்பின் மேல் பெட்ரோல் தெளிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது என காவலர் ஒருவர் தெரிவித்ததாகவும் ’இண்டியன் எக்ஸ்பிரஸ்’ செய்தி கூறுகிறது. உளவுத் துறையைச் சேர்ந்த சிலர், தங்களது பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, மாராவின் மரணத்தில் சிஆர்பிஎப் கைங்கர்யம் இருக்கிறது

என்று உறுதிப்படுத்தினர். ''அவரை ஒரு நக்சலைட் என்று நினைத்து சிஆர்பிஎப் பிடித்துச்சென்றது. கடுமையான முறையில் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. உள் ரத்தக்கசிவின் காரணமாக அவர் மரணமடைந்திருக்கக் கூடும்,'' என்று அவர்கள் கூறினர். மாரா ஒரு அப்பாவியா என்று கூற அவர்கள் மறுத்துவிட்டனர். எனினும், ''தொடர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது, அவரிடமிருந்து பயனுள்ள தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்பதைக் காட்டுகிறது,'' என்று அவர்கள் கூறினர்.

இதே போன்ற ஒரு சம்பவம் குறித்த செய்தி கடந்த ஆண்டு செப்டம்பரில் 'தி ஹிண்டு' நாளேட்டில் வந்துள்ளது. பழங்குடியினத்தைச் சேர்ந்த மட்காம் ஜோக்ரா என்பவர் கைது செய்யப்பட்டு, சிஆர்பிஎப் மற்றும் மாவட்ட காவல்துறையினரின் விசாரணைக்குப் பிறகு சில மணி நேரங்களில் மூளை ரத்தக்கசிவின் காரணமாக மரணமடைந்தார் என்பது அந்தச் செய்தி.

மூத்த பழங்குடி தலைவர்களில் ஒருவரும் பாஜக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான நந்த்குமார் சாய் இவ்வாறு கூறினார்: ''சுக்மா என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே அரசு நிர்வாகத்தையும் நீதித்துறையையும் ஆதிவாசி மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். சாதாரண மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் உணர்கிறபோதுதான் இது சாத்தியமாகும்.'' அவர் மேலும் கூறியது வருமாறு: ''மாரா சித்திரவதை செய்யப்பட்டார் என்பதை மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்துகிறது. காவலர்களை சஸ்பெண்ட் செய்திருப்பது மட்டும் போதுமானதல்ல. ஒரு சுதந்திரமான நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, குற்றத்திற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது திட்டவட்டமாக முடிவு செய்யப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.''

**ஆதாரம்: தி ஹிண்டு – 17.1.2012**

# சிறைகளில் உள்ள விசாரணைக் கைதிகளுக்கு நீதி வழங்க ஒரு குரல்

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைதுசெய்யப்பட்ட 5 கார்ப்பரேட் நிறுவன அதிபர்களுக்கு ஜாமீன் அனுமதி வழங்கிய உச்சநீதிமன்றம், விசாரணைக்காக காலவரையின்றி ஒருவரை சிறையில் அடைத்திருப்பது என்பது அவரது அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கிற செயலேயாகும் என்ற, நிலைநிறுத்தப்பட்ட சட்டத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ''குற்றவாளி என அறிவிக்கப்பட்ட பிறகுதான் தண்டனை தொடங்குகிறது, முறையான விசாரணை நடத்தப்பட்டு உரிய முறையில் அவர் குற்றவாளி என கண்டறியப்படும் வரையில் நிரபராதியாகக் கருதப்பட வேண்டியவரே என்ற கொள்கைக்கு நீதிமன்றங்கள் வார்த்தையளவை விடக் கூடுதலான மரியாதை செலுத்தக் கடமைப்பட்டுள்ளன,'' என்று நீதிபதிகள் ஜி.எஸ். சிங்வி, எச்.எல். டாட்டு ஆகியோர் கொண்ட அமர்வுக்குழு (பெஞ்ச்) கருத்துக் கூறியுள்ளது. 2ஜி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு ஜாமின் வழங்கக் கூடாது என மத்திய புலனாய்வுத் துறையும் (சிபிஐ), தில்லி உயர்நீதிமன்றமும் கூறியிருப்பதில் என்ன தர்க்க நியாயம் இருக்கிறது என்று கேட்ட நீதிபதிகள் இவ்வாறு கூறியுள்ளனர். ''சிறையிலடைக்காதே, ஜாமினில் விடு'' (''பெயில், நாட் ஜெயில்) என்பதே பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றம் நிறுவியுள்ள முறையான விதியாகும். ஆனால், கீழ் நிலை நீதிமன்றங்கள், தொடர்ச்சியான மெகா ஊழல்களின் காரணமாக உருவாகியுள்ள ''ஊழல் பேர்வழிகளைத் தூக்கில் போடு'' என்ற மன நிலைக்கு இரையாகி அந்தத் தீர்ப்புகளை அண்மைக் காலமாக முடக்கி வருகின்றன.

குற்றவியல் நடைமுறைகள் சட்டத்தின் கீழ், ஜாமின் மனுக்கள் மீது முடிவு செய்யும்போது நீதிமன்றங்கள் தங்களது அதிகாரத்தை சட்டத்திற்கும் அதன் வாசகர்களுக்கும் பொருத்தமான வகையிலேயே பயன்படுத்த வேண்டுமேயன்றி, மக்கள் மன நிலை அடிப்படையில் அல்ல என்று கீழ் நிலை நீதிமன்றங்கள் உச்சநீதிமன்றத்தின் இக்கருத்தின் மூலம் உணர வேண்டும். இந்த ஆணையின் மூலம் உடனடியாகப் பயன் பெறுகிறவர்கள் பெரிய அரசியல்வாதிகளும் கார்ப்பரேட் அதிபர்களும்தான் என்ற போதிலும் கூட, சிறைகளில் வாடுகிற மற்ற விசாரணைக் கைதிகளுக்கும் இது ஒரு நம்பிக்கை ஒளிக் கீற்றை அளித்துள்ளது.

அதிகாரப்பூர்வ தகவல்களின்படி, இந்தியச் சிறைகளில் 2,57,928 விசாரணைக் கைதிகள் உள்ளனர். அதாவது சிறைகளில் கைதிகளாக இருப்பவர்களில் விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கை 67 சதவீதம். அவர்களில் பெரும்பாலோர் சமுதாயத்தின் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். ஜாமின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரம் இல்லாதவர்கள். ஆகவே சிறையிலேயே இருப்பதன்றி வேறு வழி இல்லாதவர்கள். அவர்களில் சிலர், குற்றவாளிகள்தான் என்று அறிவிக்கப்பட்டு தண்டனை அளித்திருந்தால் எவ்வளவு காலம் சிறையில் இருக்க வேண்டியிருக்குமோ அதை விட அதிகக் காலத்தை சிறைகளில் கழித்துவிட்டார்கள். தெளிவான புரிதல் இல்லாத நிலையில் கீழ் நிலை நீதிமன்றங்கள், விசாரணைக்காகக் காத்திருக்கிற கைதிகளின் ஜாமின் மனுக்கள் மீது மாறுபட்ட சில நேரங்களில் முரண்பட்ட தீர்ப்புகளை அளிக்கின்றன. உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்ச், விசாரணைக் கைதிகளுக்கு ஜாமின் அனுமதி வழங்குவதற்கான அளவுகோல்களை மறு ஆய்வுக்கு உட்படுத்தவும், கீழ்நிலை நீதிமன்றங்கள் பின்பற்ற ஏற்ற வகையில் தெளிவான வழிகாட்டல்களை உருவாக்கவும் கடந்த வாரம் ஒப்புக் கொண்டது. இதனை உச்சநீதிமன்றம் எவ்வளவு விரைவில் செய்கிறதோ அவ்வளவு நல்லது.

**ஆதாரம்: இண்டியன் எக்ஸ்பிரஸ் (25.11.2011)**

# நீர்த்துப் போகும் ஒரு சட்டம்

**டி.கே. ராஜலட்சுமி**

"குற்றச் செயல் வழக்குகளில் பரஸ்பர உடன்பாடு" தொடர்பாக இந்திய சட்ட ஆணையம் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை பல ஆழமான தாக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்திய குற்றவியல் சட்டம் (ஐபிசி) 498A பிரிவு, ஒரு பெண் கொடுமைக்கு உட்படுத்தப்படுகிறாள் என்றால் அவளது கணவன் அல்லது உறவினர்களுக்குத் தண்டனை வழங்க வழிசெய்கிறது. ஆணையம் தனது அறிக்கையில், அந்தக் குற்றம் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு பரஸ்பரம் விட்டுக்கொடுத்து உடன்பாடு காணத்தக்கது என சட்டத்தில் திருத்தம் செய்யப் பரிந்துரைக்கிறது. குற்றவியல் சட்டத்தின் உள்ளடக்கத்தில், பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல் என்பது "சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் இணக்கமான உடன்பாட்டிற்கு வந்ததன் விளைவாக அரசுத்தரப்பு அக்குற்றச் செயலைப் பொறுத்துக்கொள்வது" என்று அந்த அறிக்கை விளக்கம் அளிக்கிறது.

தற்போதுள்ள சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவில், கொடுமை என்பதற்கு அளிக்கப்பட்டிருக்கிற விளக்கத்தில், ஒரு பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டுதல் அல்லது கடுமையான காயம் ஏற்படுத்துதல் அல்லது உயிருக்கோ உடல் உறுப்புக்கோ உடல் நலத்திற்கோ ஆபத்து ஏற்படுத்துதல் அல்லது சொத்து அல்லது பணமதிப்பு வாய்ந்த உறுதிப்பத்திரம் தருமாறு ஒரு பெண்ணை அல்லது அவளது உறவினர்களைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் சித்திரவதை செய்தல் என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வரதட்சணை தொடர்பான சித்திரவதைகளும் வன்முறைகளும் இந்தச் சட்டப் பிரிவின் கீழ் வருகின்றன. ஐபிசி 498A பிரிவின் கீழ் வழக்குத் தொடுப்பது என்பது பெரும்பாலும் 1961ம் ஆண்டின் வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் 3, 4வது பிரிவுகளின் கீழ் பதிவாகிற வழக்குடன் இணைந்தே வருகிறது என்று சட்ட ஆணையம் தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

இவ்வாறு ஒரு குற்றச்செயல் தொடர்பாக இணக்கமான உடன்பாட்டிற்கு வருவதற்கு ஆதரவாக முன்வைக்கப்படும் வாதம் என்ன? ஒரு பெண் தனது கணவன் மன்னிப்புக் கேட்டதாலோ அல்லது தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஏதேனும் இழப்பீடு பெற்றதாலோ அவள் தான் மோசமாக நடத்தப்பட்டதையும் தனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதையையும் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறாள் என்றால், குற்றவியல் நடவடிக்கையை விலக்கிக்கொள்வதில் சட்டம் குறுக்கே நிற்கக் கூடாது என்பதே அந்த வாதம். இந்த சட்டப்பிரிவு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆகிவிடக்கூடாது, "குடும்பத்தையும் சமூக உறவுகளையும் பாதிக்கக்கூடிய ஒரு நுட்பமான பிரச்சனையைக் கையாள்வதில்" ஒரு நிதானமான ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்துடன் கூடிய அணுகுமுறை தேவை என்று ஆணைய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சனையைக் கையாளுகையில் ஒரு வறட்டுக் கோட்பாட்டுத்தனமான, தனிமைப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்ள இயலாது என்று அறிக்கை கூறுகிறது. மேலும், ஒரு குடும்பப் பிரச்சனையின் நுட்பமான அம்சமும் தனிப்பட்ட உண்மைகளும் சந்தர்ப்ப சூழல்களும் புறக்கணிக்கப்படகூடாது என்றும் அது கூறுகிறது. மொத்தத்தில், குற்றச்செயலாகக் கருதும் 498A பிரிவால் சமுதாயத்திற்குக் கொஞ்சமும் நன்மை ஏற்படவில்லை என்று வாதிடப்படுகிறது.

**குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை முடித்துக்கொள்ள ஏதுவாக, துன்பத்தில் உள்ள தம்பதியினருக்கு அதிகமான வழிகள் இருக்கும் நிலையில் ஒரு அறிவுப்பூர்வமான, நிதானமான அணுகுமுறை தேவைப்படுகிறது என்றும் அறிக்கை கூறுகிறது.**

இணக்கமான உடன்பாட்டிற்கு உரிய குற்றச் செயலாக்குவதற்கு எதிரான வாதம் என்ன? வரதட்சணை என்பது ஒரு சமூகத் தீங்கு. வரதட்சணை கேட்டு மனைவிகளைத் துன்புறுத்துகிறவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட சட்டம் முழுமையாகச் செயல்பட அனுமதிக்க வேண்டும், தனிப்பட்ட முறையில் சமரசம் செய்துகொள்வதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கப்படக் கூடாது என்று வாதிடப்படுகிறது.

பாதிக்கப்படும் பெண்கள்தான், தங்களது குழந்தைகளின் நலனுக்காகவோ அல்லது தங்களது சொந்தப் பொருளாதாரத் தேவைக்காகவோ சமரசம் செய்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று மகளிர் அமைப்புகள் கூறுகின்றன. சமரசத்திற்கும் இணக்கத்திற்குமான நிபந்தனைகள் பெரும்பாலும்

பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்யாததாகவே இருக்கின்றன. புகுந்த வீட்டில் வன்முறையை எதிர்நோக்கும் பெண்கள், பொதுவாக சித்தரிக்கப்படுவது போல, 498A பிரிவை அடிக்கடியோ சிந்திக்காமலோ நாடுவதில்லை என்றும் மகளிர் அமைப்புகள் கூறகின்றன.

**தேசிய குற்றச் செயல்கள் பதிவுத்துறை வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை, 2006-10 காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றசெயல்கள் 29.6 சதவீதம் அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சித் தகவலைத் தருகிறது.**

### மணவாழ்க்கை இணக்கமும் பெண்கள் நலனும்

இணக்கமான உடன்பாட்டிற்கு இடமில்லை என்றால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று சட்ட ஆணையம் கூறுகிறது. சமூகத் தீங்கு அல்லது சமூக நலன் என்பதை ஒரு வெற்றிடத்தில் வைத்துக் காணக்கூடாது, ஒரு ஒட்டுமொத்தமான, அறிவுப்பூர்வமான கண்ணோட்டம் தேவைப்படுகிறது என்று அறிக்கை கூறுகிறது. "ஒரு சமூகக் சீர்கேட்டைக் கட்டுப்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் செயல்படுவதற்கு எதுவும் குறுக்கே வரக்கூடாது, அதே நேரத்தில் மணவாழ்க்கையின் இணக்கத்தையும் பாதிக்கப்பட்ட பெண்களின் நலனையும் மேம்படுத்துவதில் சமுதாயத்திற்கும் சமமான அக்கறை இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது," என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை முடித்துக்கொள்ள ஏதுவாக, துன்பத்தில் உள்ள தம்பதியினருக்கு அதிகமான வழிகள் இருக்கும் நிலையில் ஒரு அறிவுப்பூர்வமான, நிதானமான அணுகுமுறை தேவைப்படுகிறது என்றும் அறிக்கை கூறுகிறது.

"கணவனால் துன்புறுத்தப்பட்ட ஒரு மனைவி கடந்த காலத்தை மறந்து கணவனுடன் சுமுகமாக வாழத் தயாராக இருந்தால் அல்லது வெறுப்புணர்ச்சியோ பழியுணர்ச்சியோ இல்லாமல் கவுரவமாகப் பிரிந்து வாழ முடிவு செய்கிறாா் என்றால், அதை சமுதாயம் ஒருபோதும் எதிர்க்காது; அத்தகைய ஒரு சுமுக உடன்பாட்டை சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பது தடுக்கப்பட்ட தீங்காகிய வரதட்சணையை ஊக்குவிப்பதாகவோ ஆகாது," என்று அறிக்கை கூறுகிறது.

கல்வியறிவில்லாத பெண்கள் வாழ்வாதாரத்திற்கான வழிகள் இல்லாத நிலையில் தன்னுடைய மனக் குறைகளுக்குத் தீர்வு ஏற்படாவிட்டாலும் கூட சட்டப்பூர்வ நடவடிக்கையைக் கைவிடுமாறும் சமாதானமாகப் போகுமாறும் கட்டாயப்படுத்தப்படலாம் என்ற வாதம் ஆதாரமற்றது என்று ஆணையத்தின் அறிக்கை தள்ளுபடி செய்கிறது. 498A சட்டப்பிரிவின் கீழ் இணக்க உடன்பாடு காண்பதற்கான மனுக்களைக் கையாளும்போது நீதிமன்றங்கள் செயலூக்கத்துடன் பங்களிக்கும் என்று அறிக்கை கூறுகிறது. 498A சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் இணக்க உடன்பாட்டிற்கான ஒரு விண்ணப்ப மனுவை கையாள்வதற்கான விதிகளை பரிந்துரைத்துள்ள ஆணையம், குற்றவியல் நடவடிக்கை சட்டத்தின் (சிஆர்பிசி) 320வது பிரிவில் 2 ஏ என்ற ஒரு துணைப்பிரிவை சேர்க்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது.

இது ஒரு சிக்கலான பிரச்சனை. குறிப்பாக மாதர் இயக்கத்துடன் நெருக்கமான தொடர்புள்ள மகளிர் அமைப்புகள், இந்த சட்டத்தை நீர்த்துப் போக செய்வதற்கு எதிராக மீண்டும் மீண்டும் குரல் கொடுத்து வந்துள்ளன. பெண்களை பாதுகாப்பதற்கான பல சட்டங்கள் மிக அரிதாகவே செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தச் சட்டங்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பது ஒரு போலியான காரணமே என்றும் அதை ஒரு தனிப் பிரச்சனையாகவே காணவேண்டும் என்றும் மகளிர் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. தற்போதைய சட்டப்பிரிவிலேயே குற்றவியல் நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்வதற்கான விதிகள் இருக்கவே செய்கின்றன. ஆகவே, 498A சட்டப்பிரிவை இணக்க உடன்பாட்டிற்கு ஏற்ற வகையில் திருத்தவில்லை என்றால், மீண்டும் இணைந்து வாழ விரும்புகிற தம்பதிகளுக்கு அதற்கான வழியில்லாமல் போய்விடும் என்ற வாதம் மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கிறது என்று மகளிர் அமைப்புகள் கூறகின்றன.

**498A சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் இணக்க உடன்பாட்டிற்கான ஒரு விண்ணப்ப மனுவை கையாள்வதற்கான விதிகளை பரிந்துரைத்துள்ள ஆணையம், குற்றவியல் நடவடிக்கை சட்டத்தின் [சிஆர்பிசி] 320வது பிரிவில் 2 ஏ என்ற ஒரு துணைப்பிரிவை சேர்க்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது.**

அரசாங்க அறிக்கைகளிலேயே, பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் தண்டனை அளிக்கப்பட்ட விகிதாச்சாரம் மிகக் குறைவாகவே இருப்பது

தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களால் பாதிக்கப்படும் பெண்கள் அதைப்பற்றி புகார் செய்வதும் குறைவாகவே இருக்கிறது. ஆனால், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன என்றும் மகளிர் அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. பெண்களின் உரிமைகளுக்கான வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு அளித்துள்ள 'உயிரோட்டமாக இருத்தல்' என்ற தலைப்பிலான 5வது அறிக்கையில் 2005ம் ஆண்டின் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்கிறது. அதில் அந்தச் சட்டம் பற்றிய அறிவு குறைவாகவே இருக்கிறது, அதன் செயலாக்கம் மிக பலவீனமாகவே இருக்கிறது. என்று கூட்டமைப்பின் அறிக்கை கூறுகிறது.

498ஏ சட்டப்பிரிவு தவறாக பயன்படுத்துவது பற்றிய ஆய்வு 1990ம் ஆண்டுகளில் தொடங்கியது. ஆனால் அண்மைக்காலத்தில்தான் அது வேகம் பிடித்துள்ளது. 1996ல் சட்ட ஆணையத்தின் 154வது அறிக்கை, இந்தச் சட்டப்பிரிவை இணக்கமான உடன்பாடு தொடர்பான பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்தது. சட்ட ஆணையம் தனது இந்த நிலைபாட்டைத்தான் 2001ல் வெளியிட்ட 177வது அறிக்கையிலும் வலியுறுத்தியுள்ளது.

**குடும்ப வருமானம் கூர்மையாக வீழ்ச்சியடைகிறது என்றால், பெண்களுக்கு ஊதியம் இல்லாத குடும்ப வேலைகள் அதிகரிக்கின்றன, குடும்ப வன்முறைகளும் அதிகரிக்கின்றன என்று நடவடிக்கைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.**

சட்ட விவகாரங்கள் துறையானது இதுகுறித்த சட்ட ஆணையத்தின் கருத்தை 2010ம் ஆண்டில் கேட்டது. அதற்கு முன் 2009 செப்டம்பரில் சட்ட ஆணையத்தின் கருத்தை உள்துறைச் செயலர் அலுவலகம் கேட்டது. சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற அனுமானத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு சட்ட ஆணையத்தின் கருத்து கேட்கப்பட்டது. 2010ல் ஒரு வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், நடப்பு நிலைமைகளை கருத்தில் கொண்டு அதற்கேற்ப தற்போதைய சட்டங்களில் உரிய மாற்றங்கள் செய்வதற்கான நேரம் வந்துவிட்டது என்று கூறியது.

### குடும்பத்தின் பெயரால்

அதைத் தொடர்ந்து ஆணையம் பல்வேறு தரப்பினரின் கருத்துகளைக் கேட்டு, கேள்விகள் அடங்கிய ஒரு ஆவணத்தை சுற்றுக்கு விட்டது. பல்வேறு அமைப்புகளிடமிருந்து ஆணையத்திற்கு கருத்துகள் வந்தன. அந்த அமைப்புகள் தங்களை குடும்ப நலனுக்காகவும் திருமணத்தை பாதுகாப்பதற்காகவும் செயல்படுகிற அமைப்புகள் என்று கூறிக்கொண்டன. 498A சட்டப்பிரிவை இணக்கமான உடன்பாட்டிற்கு உரியதாக மாற்ற வேண்டும் என்றும் அந்த அமைப்புகள் கோரின. சட்டப்பிரிவை மாற்றாமல் அப்படியே பராமரிக்க வேண்டும் என்று பல்வேறு மகளிர் அமைப்புகளிடமிருந்தும் ஆணையத்திற்கு கருத்துகள் வந்தன.

இந்தக் காலகட்டத்தில் அரசாங்க வட்டாரங்களிலிருந்து பல்வேறு அறிக்கைகள் அவ்வபோது வெளியாகின. இந்திய குடும்ப அமைப்பை பாதுகாக்க முயல்வதாக கூறிக்கொண்ட பல்வேறு அமைப்புகள் தீவிர பிரச்சாரத்திலும் ஈடுபட்டன. இந்திய நல்லிணக்க பாதுகாப்பு அமைப்பு, தேசிய குடும்ப நல்லிணக்கம், அன்னையர் மற்றும் சகோதரிகள் முன்முயற்சி அமைப்பு, பாரத் பச்சாவோ சங்காதன், பிரிட்டோ புருஷ் பொரிஷாத், அகில இந்திய மறக்கப்பட்ட மாதர் சங்கம், கைது செய்யப்பட்ட மில்லியன் பெண்களின் பிரதிநிதிகள் என்பன உள்ளிட்ட அமைப்புகள் இவ்வாறு சட்ட ஆணையத்திற்கு கடந்த ஓராண்டு காலத்தில் தங்களது கருத்துகளை அனுப்பியுள்ளன.

தனது வாதத்திற்கு வலுச் சேர்ப்பதற்காக இந்திய சட்ட ஆணையம், குற்றவியல் நீதி அமைப்பில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து நீதிபதி மாலிமத் குழு தனது அறிக்கையில் செய்திருந்த பரிந்துரைகளை பயன்படுத்திக் கொண்டது. மாலிமத் குழு தனது அறிக்கையில் 498 ஏ சட்டப்பிரிவால் மனைவிக்கும் பயனில்லை என்று கூறியுள்ளது. அந்த சட்டப்பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் புகார்கள் ஜாமீனில் விடுவிக்க இயலாதவையாக, இணக்க உடன்பாட்டிற்கு வழியில்லாதவையாக இருப்பதால் அப்பாவிகள் சமூகத்தில் குற்றவாளிகளாகப் பார்க்கப்படுவதற்கும் கடுமையான நிலைமைகளுக்கும் உள்ளாகக்கூடிய வாய்ப்பு உள்ளது என்றும் மாலிமத் குழு கூறியுள்ளது. இந்த சட்டப்பிரிவு இதயமற்றது என்று கூறிய மாலிமத் குழு, "ஆகவே, தம்பதியர் மீண்டும் இணைவதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதற்காக இந்தக் குற்றச்செயலை அ) ஜாமீனில் விடுவிக்கத்தக்கதாகவும், ஆ) இணக்க உடன்பாட்டிற்கு உட்பட்டதாகவும் மாற்றுவது அவசியம்," என்று பரிந்துரைத்தது.

இந்தியாவில் உள்ள பெண்கள் எத்தனை முறை, எந்தெந்த வகைகளில் குடும்ப வன்முறைகளுக்கு உள்ளாகிறார்கள் என்ற விவரத்தை தேசிய குடும்ப நல ஆய்வு அறிக்கை 3 (2005–06) பட்டியலிடுகிறது. 15 முதல் 49 வயது வரை உள்ள பெண்களில் 3ல் ஒரு பகுதியினர் உடல் ரீதியான வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர், 10ல் ஒரு பகுதியினர்

பாலியல் வன்முறைகளுக்கு இலக்காகின்றனர், நான்கு பெண்களுக்கு ஒருவர் வீதம் மட்டுமே சட்ட உதவி கோருகிறார்கள் என்று அந்த பட்டியல் கூறுகிறது. அதிர்ச்சி அளிக்கத்தக்க வகையில், 54 சதவீத பெண்கள் மனைவியைக் கணவன் அடிக்கும் பழக்கத்தை நியாயப்படுத்தியுள்ளனர். தேசிய குற்றச் செயல்கள் பதிவுத்துறை வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை, 2006–10 காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றசெயல்கள் 29.6 சதவீதம் அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சித் தகவலைத் தருகிறது.

**வங்கிகளில் உள்ள மொத்த சேமிப்புக் கணக்குகளில் 20.8 சதவீதம் மட்டுமே பெண்களுக்குச் சொந்தமானவை.**

### அதிகாரப்படுத்துவதில் முட்டுக்கட்டை

திட்டக்குழுவுக்காக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தயாரித்து அளித்துள்ள 12வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான மாதர் அமைப்புகள் அதிகாரப்படுத்துதலுக்கான நடவடிக்கைக் குழு அறிக்கை போன்ற சமீபத்திய அரசாங்க ஆவணங்கள் பாலின பாகுபாடுகள் மேம்பாட்டு நடவடிக்கைகளால் மட்டும் தானாக மாறிவிடாது என்று ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது உள்ள திட்டங்கள் மற்றும் சட்ட விதிகளை ஆய்வு செய்து திட்டக்குழுவிற்கு பரிந்துரை வழங்குவதற்காக அமைக்கப்பட்டதுதான் இந்த நடவடிக்கைக் குழு. பெண்களை அதிகாரப்படுத்துவதற்கு சமூக ரீதியாகவும் கட்டமைப்பு சார்ந்தும் ஒரு மிகப்பெரிய முட்டுக்காட்டையாக இருப்பது வன்முறைதான் என்று நடவடிக்கைக் குழு கூறுகிறது. குடும்ப வருமானம் கூர்மையாக வீழ்ச்சியடைகிறது என்றால், பெண்களுக்கு ஊதியம் இல்லாத குடும்ப வேலைகள் அதிகரிக்கின்றன, குடும்ப வன்முறைகளும் அதிகரிக்கின்றன என்று நடவடிக்கைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

பெண்களின் பொருளாதார தற்சார்பு, பெண்களுக்கான கடன் வசதிகள் ஆகியவை ஒரு வரம்புக்கு உட்பட்டதாகவே இருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. உதாரணமாக, வங்கிகளில் உள்ள மொத்த சேமிப்புக் கணக்குகளில் 20.8 சதவீதம் மட்டுமே பெண்களுக்குச் சொந்தமானவை. வங்கிகளில் வழங்கப்படும் சிறு கடன் உதவிகளில், பெண்களுக்குக் கிடைப்பது 19.8 சதவீதம்தான். சட்டப்பூர்வ உறுதிமொழிகளால், பெண்களை அதிகாரப்படுத்துவதில் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு பலன் அளிக்கவில்லை. பெண்கள் கொண்டுவரும் புகார்களை காவல்துறையினர் பதிவு செய்ய மறுப்பது, போதுமான அளவு விசாரணை இல்லாததது போன்ற தகவல்களும் பதிவாகியுள்ளன. நீதிமன்றத்தில் அரசுத் தரப்பிலிருந்து சரியான முறையில் வழக்கை முன் வைக்காதது பற்றிய தகவல்களும் உள்ளன. நீதிமன்ற நடைமுறைகளே கூட நீதி வழங்குவதை தாமதப்படுத்துகின்றன. குடும்ப வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கான சட்டம் 2006 அக்டோபர் 26 அன்று நடைமுறைக்கு வந்தது. சட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி உதவிகள் மத்திய அரசால் மாநில அரசுகளுக்கும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் வழங்கப்படவில்லை என்று நடவடிக்கைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008ம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை சட்டத்திருத்த முன்வரைவுக்கு, நடைமுறை சார்ந்த பல திருத்தங்களை நடவடிக்கைக் குழு முன்வைத்துள்ளது. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கூடுதலாக பயனளிக்கத்தக்க வகையில் அந்த திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஒரு பாலியல் வன்முறை நடந்திருக்கிறதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக நடத்தப்படும் இரட்டைவிரல் பரிசோதனையை ஒழிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பரிந்துரைகளையும் அந்த அறிக்கை அளித்துள்ளது. வரதட்சணை என்பதற்கான வரையறைகளும், அதற்கான தண்டனைகளும் தொடர்பாக, வரதட்சணை தடுப்புச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

திருமணச் செலவுகளுக்கு ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்கவும் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேசிய குற்றச்செயல்கள் பதிவுத்துறை அளித்துள்ள விவரங்களை ஆதாரம் காட்டியுள்ள அந்த அறிக்கை, வரதட்சணைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்ட 28 ஆண்டுகளில் வரதட்சணை சாவுகள் தங்குதடையின்றி தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்துள்ளன என்று கூறுகிறது. கவுரவக் கொலைகளைக் கையாள்வதற்கு என்றே ஒரு தனிச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும், கணவனின் சொத்துக்களில் மனைவிக்கும் உரிமை அளிக்கும் மணவாழ்க்கை சொத்துச் சட்டம் கொண்டு வருதல், பராமரிப்பு சட்டங்களை மறு ஆய்வு செய்தல் போன்ற ஆலோசனைகளையும் நடவடிக்கைக் குழுவின் அறிக்கை முன்வைத்துள்ளது.

"குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு உரிமை, பரம்பரை சொத்தில் வாரிசு உரிமை போன்ற குறிப்பான சட்டங்களின் மூலம் பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கூட, பல்வேறு காரணங்களால் இந்த உரிமைகளைப் பெண்களால் அனுபவிக்க முடியவில்லை," என்று பெண்களை அதிகாரப்படுத்துதலுக்கான நடவடிக்கைக் குழுவின் அறிக்கை குறிப்பிடுகிறது.

**ஆதாரம்: *Front line* (9.3.2012)**

# டில்லி நர்சரி வகுப்புகளில் முஸ்லிம் குழந்தைகள் மிகக் குறைவு

**பிந்து சாஜன் பிறப்படான் மற்றும் பனா சித்திக் ஜாமன்**

புதுடில்லியிலுள்ள தனியார் பள்ளிகளில் இந்த வருட நர்சரி பள்ளிச் சேர்க்கையில் முஸ்லிம் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றது. இணைய தளங்களில் தம் பள்ளியைப் பற்றிய தகவல்களை வெளியிடும் 92 பள்ளிகளில் 20 பள்ளிகளில் முஸ்லிம் குழந்தைகளை முற்றிலும் சேர்க்கவேயில்லை. 17 பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு குழந்தை மட்டுமே சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஒரு சில பள்ளிகள் மட்டுமே முஸ்லிம் குழந்தைகள் பற்றி தகவல் தரக் கூடிய அளவில் இருக்கின்றன. முஸ்லிம் விண்ணப்பதாரர்கள் இருக்கின்றனர். தனிப்பட்ட முறையில் சில பள்ளிகள் தரும் தகவல்களின்படி பெருமளவில் முஸ்லிம் விண்ணப்பங்கள் வந்திருந்தாலும் அவர்கள் தேர்வு செய்யப்படுவது என்பது அவ்வளவாக இருக்காது என்றுதான் கூறப்படுகிறது. உதாரணத்துக்கு ஸ்பிரிங்டேல்ஸ் பள்ளியில் 170 காலியிடங்களுக்கு 2443 விண்ணப்பங்கள் வந்தன. அவற்றில் 155 விண்ணப்பங்கள் முஸ்லிம் குழந்தைகளுடையது. இதில் பொருளாதார நலிவுடைய இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இடம் கிடைத்தது. கிழக்கு கைலாஸ் இடத்திலுள்ள டில்லி பப்ளிக் ஸ்கூல் 2997 விண்ணப்பங்கள் பெற்றது. அதில் 269 முஸ்லிம்களுடையது காலியிடங்களோ 180. பல முஸ்லிம் குடும்பங்கள் வாழும் அப்பகுதியிலுள்ள பள்ளி சேர்த்தது மொத்தத்தில் ஐந்து குழந்தைகளைத்தான்.

### ஷீலாவிற்குக் கடிதம்:

டில்லியின் முதலமைச்சர் ஷீலா தீக்சித்துக்கு இதுபற்றிக் கடிதம் எழுதினார் சமூக ஆர்வலரான அப்துல் காலித். இது தரமான கல்வி முஸ்லிம் குழந்தைகட்கு மறுக்கப்படுவதை குறிப்பிடுகின்ற தென்றார். இக்கடிதத்தின் நகல் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கபில் சிபில் மற்றும் தினோரு தனியார் பள்ளிமுதல்வர்கட்கும் அனுப்பப்பட்டது எங்களால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் நர்சரி பள்ளிகள் முஸ்லிம் குழந்தைகளை சேர்ப்பதில் பாரபட்சம் காட்டுகின்றது. மொத்த ஜனத்தொகையில் 15 சதவீதம் முஸ்லிம் ஜனத்தொகை என்றாலும் 5 சதவீதம் குழந்தைகள் தான் இந்தப் பிரபல பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தன்னிடம் உதவி கேட்டு வந்தனர் என்று கூறுகிறார் காலித். 179 பள்ளிகளில் விசாரிக்கப்பட்டது. இதில் 87 பள்ளிகள் சேர்க்கை தகவல்கள் தரத் தவறிவிட்டன. இத்தகவல்கள் தரப்பட வேண்டும் என்கிறது பள்ளி இயக்குநர் அலுவலகம். கட்டளை பிறப்பித்திருந்தும் கூட, கீர்த்தி நகரிலுள்ள ஸ்பிரிங்டேல்ஸ் பள்ளியில் ஒரு முஸ்லிம் குழந்தை கூட சேர்க்கப்படவில்லை. ஆனால், தவுலா கான் பிரிவுப் பள்ளியில் ஒரு குழந்தை சேர்க்கப்பட்டது.

லஜ்பத் நகரிலுள்ள புளூ பெல்ஸ் பள்ளியில் 150 குழந்தைகள் சேர்க்கப்பட்டனர். இதில் இருவர் முஸ்லிம் குழந்தைகள். சாதிக் நகரில் உள்ள இந்தியன் ஸ்கூலில் 120 குழந்தைகளில் மூவர் முஸ்லிம்கள் டில்லிப் பள்ளிகளில் மதுரா ரோடிலுள்ள மிடல்லி பப்ளிக்கூலில் தான் 240 சேர்க்கையில் 65 முஸ்லிம். குாந்தைகள் சேர்க்கப்பட்டனர். 23 நபர்கள் பொதுப் பிரிவிலும் 42 நபர்கள் பொருளாதார நலிவுப் பிரிவுவிலும் சேர்க்கப்பட்டனர். இம்மூன்று பள்ளிகளும் முஸ்லிம் வகுப்பினர் பெருமளவில் வாழும் இடத்தில் உள்ளன.

முஸ்லிம் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதில் ஏன் இத்தனை பாகுபாடு ஏன் இந்தப் பள்ளிகளில் முஸ்லிம் குழந்தைகளை சேர்ப்பதற்கு முடியாதபோது டில்லி பள்ளிக் ஸ்கூலில் மட்டும் சேர்ப்பதற்கு கஷ்டமில்லையே ஏன் ? திரு. காலித் தன் கடிதத்தில் இதைத் தான் கட்டிக்காட்டி இருந்தார். ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு விதமான புள்ளிகளை பின் பற்றுவதுதான் அடிப்படை பிரச்சனை என்று கூறுகின்றார் இந்தியன் பள்ளி அருகாமையில் உள்ளவர்களுக்கு 30 புள்ளிகளும் புளூபெல்ஸ் 40 புள்ளிகளும், கேம்பிரிட்ஜ்பள்ளி 10 புள்ளிகளும் ஒதுக்கியிருக்கின்றன.

திரு.காலித் சொல்வது என்னவென்றால், இந்த அமைப்பு முறை முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுகிறது என்பதுதான். உதாரணமாக கேம்பிரிட்ஜ்பள்ளி 7 புள்ளிகள்தான் ஒதுக்கியுள்ளது. ஜாகிர் நகருக்கும் 10 புள்ளிகள் ஒதுக்கி உள்ளது. இரண்டு காலனிக்கு இடையிலுள்ள தூரம் 1.18 கி.மீட்டர்தான். நகரின் சில பகுதிகளில் தான் முஸ்லிம்கள் நெருக்கமாக வசிக்கின்றனர். இதில் ஜாகிர் நகரும் ஒன்று. அது கேம்பிரிட்ஜ்பள்ளியிலிருந்து 2 கி.மீ. தூரம்தான். ஆனால், அப்பள்ளி ஏழு புள்ளிகள் தான் ஒதுக்கி உள்ளது. பிரண்ட்ஸ் காலனிக்கு 10 புள்ளிகளும் இன்னும் அதிக தூரத்திலுள்ள லஜ்பட் நகருக்கு 10 புள்ளிகள். இது 9 தேச்சையாக

நிகழ்ந்திருக்கலாம் என்றாலும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் உள்ள பள்ளிகள் குறைந்த புள்ளிகளோ ஒதுக்கி உள்ளது ஒரு சோகம்.

இப்படி வெளித்தள்ளபடுவதால் முஸ்லிம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சங்கம் விஹாரிலுள்ள தரமான ஹம்தர்த் பப்ளிக் ஸ்கூலுக்கு அனுப்பும் நிர்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். இந்த புள்ளிகள் அமைப்பு மற்றும் பெற்றோரின் கல்வித் தகுதி உடன் பிறந்தோர் முன்னாள் மாணவர் போன்றவை முஸ்லிம்களுக்கு இடம் கிடைக்காமல் செய்து விடுகின்றது என்றார்.

**பள்ளிகள் பொறுப்பெடுக்க மறுத்தல்:**

பள்ளி நிர்வாகங்கள் தாங்கள் பாகுபாடு காட்டுவதில்லை என்று மறுக்கின்றன. ஒரு முஸ்லிம் குழந்தையை கூட சேர்க்காத ஒரு பள்ளியின் முதல்வர் கூறுகிறார். டில்லியிலுள்ள ஒரு சில பிரபலமான பள்ளிகளில் சேர்க்கத்தான் பெரும்பாலான பெற்றோர்கள் அப்பள்ளிகள் குறைந்த அளவிலேயே சேர்க்க விரும்புகின்றனர். அதனால்தான் இப்படிப்பட்ட பிரச்சனைகள் தோன்றுகின்றன. எனவே பள்ளி நிர்வாகத்தையோ இந்தப் புள்ளிகள் அமைப்பையோ குற்றம் சொல்ல முடியாது''.

**புள்ளி அமைப்பு தவறானதல்ல**

மத்திய மேல்நிலைப் பள்ளிகளின் முன்னாள் தலைவர் அசோக் கங்கூலி இந்த புள்ளிகள் முறையை 2001ல் அறிமுகப்படுத்திய இவர் இந்த புள்ளிகள் முறையை 2006ல் அறிமுகப்படுத்திய இவர் இந்த புள்ளிகள் முறையில் தவறில்லை என்கிறார். "இந்து'' பத்திரிகைக்கு இவர் கூறியதாவது, " இந்த புள்ளிகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமே வகுப்பறைகளில் பன்மை தன்மை கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான். அதோடு சேர்க்கையில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். பள்ளிகளில் மிகப்பெரிய அளவில் செயல்பட்டு வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த அமைப்பு முறை பள்ளிகளில் சாதி, இனம், மதம் என்று பாகுபாடு காட்டுவதற்கு இடமளிக்க வழியில்லை''.

**ஆதாரம்: *The Hindu* (19.3.2012)**

# 21 ஆண்டுகளாக சிறையில் வாடும் பெண் ஒரு மனநோயாளி

## அவரை விடுவிக்கக் கோரி மனு; அவருக்கு மருத்துவ உதவிகள் கோரிக்கை

இந்த ஆண்டு (2011) ஏப்ரல் மாதத்துடன் பக்கா என்ற விஜயா வேலூரில் உள்ள பெண்களுக்கான சிறையில் ஒரு கைதியாக 21 ஆண்டுகளை முடித்தார். அவரது பிரச்சனை எங்கே மாறுபடுகிறது என்றால், அவர் வாய்பேச இயலாதவர், அத்துடன் நீண்டகால சிறைவாழ்க்கையால் மன நிலை பாதிக்கப்பட்டவர்.

விஜயாவின் துயர நிலை சென்னை உயர்நீதிமன்றத்தின் கவனத்திற்கு, வழக்கறிஞர் பி, புகழேந்தி தாக்கல் செய்துள்ள ஒரு ஆள் கொணர் (ஹேபியஸ் கார்ப்பஸ்) மனு மூலமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. மனுவை வியாழனன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் சி. நாகப்பன், டி. சுதந்திரம் ஆகியோர் கொண்ட அமர்வுக்குழு (டிவிசன் பெஞ்ச்), மாநில அரசுக்கு விளக்கம் கோரும் நோட்டிஸ் அனுப்ப ஆணையிட்டது, விசாரணையை இரண்டு வார காலத்திற்குத் தள்ளி வைத்தது.

**மனுவில் உள்ள விவரம் வருமாறு:** விஜயாவும் (53) அவரது கணவர் சுப்பிரமணியனும் (55) ஆதாயத்துக்காகச் செய்யப்பட்ட ஒரு கொலை தொடர்பான வழக்கில் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டு, ஆயுள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டவர்கள். கோயம்புத்தூர் குற்றவியல் நீதிமன்றம் அவர்கள் கொலை, திருட்டு, கொள்ளை ஆகிய குற்றங்களைச் செய்திருக்கிறார்கள் என்று கூறி தண்டனையை அறிவித்தது. 1990 ஏப்ரல் 10 முதல் விஜயா சிறையிலேயே இருக்கிறார், அவரது உறவினர்கள் கூட அவரை சிறையில் வந்து பார்த்ததில்லை. சரியான மருத்துவ சிகிச்சையோ ஆலோசனையோ இல்லாமல் அவர் அவதிப்படுகிறார். சாலையின் இன்னொரு பகுதியில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அவரது கணவர் சுப்பிரமணியனும் கூட மன உளைச்சலோடுதான் இருக்கிறார் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச முடியாதவரான விஜயா, மற்றவர்களுடன் சைகையில்தான் தொடர்பு கொள்கிறார்.

சட்ட விதிகளின்படி, சிறையில் 20 ஆண்டுகளை முடித்த உடனேயே விஜயாவுக்கு முன்கூட்டியே விடுதலை பெறும் தகுதி ஏற்பட்டுவிட்டது என்கிறார் புகழேந்தி. "2010 ஏப்ரல் 10ம் தேதியுடன் விஜயா சிறையில் 20 ஆண்டுகளைக் கழித்துவிட்டார். முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவது குறித்துப் பரிசீலப்பதற்கான தகுதியை அவர் பெற்று 19 மாதங்கள் ஆகிவிட்டன,'' என்கிறார் புகழேந்தி. முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவரான விஜயா, சுப்பிரமணியனை சிறிது காலம் காதலித்துப் பின்னர் திருமணம் செய்துகொண்டவர். இருவருமே கோயம்புத்தூரில் தெருவில் நிகழ்ச்சிகள் நடத்திப் பிழைத்தவர்கள். 1990 ஏப்ரல் 4 அன்று, தென் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் விஜயாவிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றதைத் தொடர்ந்து, அவனை இருவரும் கொலை செய்தனர். அவர்களைக் கைதுசெய்த காவல்துறையினர் கொலைவழக்குக்கு பதிவு செய்தனர்.

**ஆதாரம்: டைம்ஸ் நியூ நெட்வொர்க் (18.11.2011)**

# பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி பெறும் வாய்ப்பு குறைந்து கொண்டே வருகின்றது

**பிரவீன் சாமி**

## நீடித்த பிரச்சாரங்களும் சட்ட மாறுதல்கள் இருந்தும் கூட தண்டிக்கப்பட்ட தீர்வு என்பது குறைந்து கொண்டேதான் வருகின்றது

பிரசாத் நகர் காவல்நிலையத்தில் புலன் விசாரணை குறிப்புகள் தெளிவாக இல்லாமல் இருக்கப்பட்டிருப்பதிலிருந்து ஒன்றை நாம் தெரிந்து கொள்ளலாம். 2005ம் ஆண்டு ஓர் இளம் பெண் உள்ளே நடந்து வரும்போது கடந்த மாதத்தில் அவள் கணவரின் சகோதரனால் தாக்கி விழ வைக்கப்பட்டாள். பூக்கள், சாக்லேட் இவற்றோடு அடிகளும் அவளுக்கு கொடுக்கப்பட்டன.

கையில் எலி மருந்து என்னும் விஷத்தை வைத்துக்கொண்டு அவள் தன்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் தன்னைத் தானே கொல்லப் போகிறதாக சொன்ன அதே நேரத்தில் 50 ரூபாய் பத்திரத்தாளில் அவளை திருமணம் செய்து கொள்வதாக சத்திய பிரமாணம் எடுத்த நேரமும் உண்டு. அதன்பின் அவளை பாலியல் பலாத்காரம் செய்த நேரமும் இருந்தது.

பாலியல் பலாத்காரம் பற்றி புகார் கொடுக்க அப்பெண்ணுக்கு எவ்வளவு பெரிய மன உறுதி இருக்க வேண்டும் என்பதை கோப்புகள் கூறாவிட்டாலும் இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் வழி நீதிமன்றத்தில் நீதி கிடைக்கப் போவதில்லை என்பதை நாம் உறுதியாகக் கூறலாம்.

**வெட்கத்துக்குரிய எண்ணிக்கைகள்:** 1973ல் தேசிய குற்றப்பதிவு அலுவலகம் (NCRB) தேசம் முழுவதும் பதிவான பாலியல் பலாத்காரப் பதிவு குறித்து புள்ளியல் விவரம் ஒன்று வெளியிட்டது. இவ்வழக்குகளில் 44.28 சதவீதம் நபர்கள்தான் விசாரணை நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது. பெண் உரிமைக் குழுக்கள் எத்தனை பல்லாண்டுகளாக கடுமையாகப் போராடிய பின்னும் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் பல முன்னோடித் தீர்ப்புகளாக வழங்கப்பட்டும் பாலியல் பலாத்கார தீர்ப்புகள் 26.5 சதவீதத்துக்கு அளவில் தண்டிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது என்பது எதைக் காட்டுகிறது என்றால் தண்டிக்கப்படும் சதவீதம் மேலும் மேலும் குறைந்து கொண்டே வருவதைதான் காட்டுகிறது. 1983ம் ஆண்டு 36.83 சதவீதம், 1993ல் 30.30 சதவீதம், 2003ம் ஆண்டு 26.12 சதவீதம்.

2010ல் மகாராஷ்டிர மாநிலத்தில் தண்டிக்கப்பட்டது 13.9 சதவீதம். ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கத்தில் 13.7 சதவீதம். கர்நாடகத்தில் 15.4 சதவீதம் ஆகும். தேசிய அளவில் ஜம்முகாஷ்மீரில்தான் மிக மிகக் குறைந்த அதாவது 2.6 சதவீதத்தில்தான் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

பாலியல் பலாத்காரத் தாக்குதல் வழக்குகளில் முனைப்புடன் பாடுபடும் வழக்கறிஞர் ரெபேக்காஜான் என்பவர் புலன்விசாரணைதான் இதற்குக் காரணம் என்கிறார். ‘‘என்னுடைய நேரடி அனுபவங்களின் மூலமே இதை நான் நிரூபிக்க முடியும். 10 வழக்குகளில் 9 வழக்குகளின் புலன் விசாரணைகள் சரியாக இருப்பதில்லை. வேறு விசயங்களைக் கூடவிட்டுவிடுங்கள். பலாத்காரம் செய்த நபர்களின் கைரேகைகள் கூட பதிவு செய்யப்பட்டிருப்பதில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்’’

2009ம் ஆண்டில் டில்லியில் SAFE என்னும் பெட்டி ஒன்று எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டது. இதன் விரிவாக்கம் Sexual Assault Forensic Evidence என்பதாகும். அதாவது இதன் மூலம் சாட்சியங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றுதான் இவை வழங்கப்பட்டன. இப்பெட்டிகள் மூலம் சாட்சியங்கள் மிகத் தெளிவாக பதிவு செய்ய முடிந்தது என்று ராம் மனோகர் லோகியா மருத்துவமனையில் பணியாற்றும் புஷ்பாசிங் கூறுகின்றார்.

ஆனால், இந்த SAFE பெட்டி காரணமாகத் தண்டனை விதிக்கப்படுவது அதிகமாகி இருக்கிறதா என்றால் இல்லைதான். ‘‘நடைமுறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை’’ என நீதிமன்ற நடவடிக்கைகளில் பழக்கப்பட்ட ஒரு அதிகாரி கூறகிறார். பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட வரை அழைத்துச் செல்லும் காவலர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று எதுவும் தெரிந்திருப்பதில்லை. அணிந்திருந்த ஆடைகள், உடைமைகள் போன்றவைகள் தடயங்கள் அழியாமல் பாதுகாக்கப்படுவதில்லை. பிறப்புறுப்பு நீர் போன்றவை சரியான வெப்ப நிலையில் பாதுகாப்புடன் வைக்கப்படுவதில்லை.

| வருடம் | *தண்டனை வழங்கப்பட்ட சதவீதம் |
|---|---|
| 1973 | 44.28 |
| 1983 | 36.83 |
| 1993 | 30.30 |
| 2003 | 26.12 |
| 2010 | 26.50 |

*தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளில் சதவீதம் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வழக்குகளில் சட்ட நடவடிக்கைகளும் உதவியாய் இருப்பதில்லை. ஒவ்வொரு வழக்கிலும் உச்சநீதிமன்றம் தரம் மிக்க விசாரணையை வலியுறுத்தி வருகின்றது. பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலத்துக்கு இணை சாட்சிகள் தேவையில்லை. பெண் அதிகாரிகள்தான் பெண்களுடன் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் விசாரணை நீதிமன்றங்களில் பாலியல் பலாத்காரம் செய்தவர்கள் தாராளமாய் வந்து போய் கொண்டிருக்கிறார்கள்.

ஐந்தில் ஒரு வழக்குகளில் கூட சாட்சியங்கள் நிரூபனமாவதில்லை. 2012 வழக்குகளில் (ஹிண்டு நடத்திய சர்வே) ஐந்தில் ஒரு வழக்கில்கூட தடயவியல் அறிவியல் நுணுக்கங்கள் பின்பற்றப்படவில்லை. ஒரு வழக்கில் 14 வயதுள்ள பீகார் பெண்ணை அவர் நண்பர் கடத்திச் சென்றுள்ளார். வழக்கு தொடுக்கப்பட்டவர் பற்றிய விவரங்கள் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. மரபணு சோதனை கூட நடத்தப்படவில்லை.

பல பெண்ணுரிமை வழக்குகளில் பணியாற்றிய டில்லிவாழ் பிரபல வழக்கறிஞரான பிங்கி ஆனந்த், “நாம் நம்முடைய கவனத்தை சட்டத்தின்மீது குறைவாகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளின் மீது அதிகமாகவும் காட்ட வேண்டுமென்று எண்ணுகிறேன், ஏனெனில் மேலும் இங்குதான் நிறையப் பிரச்சனைகள் இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

## ஏன் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்டுவதில்லை

இந்தியாவின் முதன் முதலான குற்றக் கணக்கெடுப்பு 1953ல் வெளியானபோதுதான் காவல் துறையின் மங்கிப்போன நிறம் வெளிப்பட்டுத் தெரிந்தது. “இந்தியாவின் குற்றங்கள்” என்னும் புத்தகத்தை எழுதியவர்கள் தெரிவிப்பதென்னவெனில் “குற்றங்களைப் புலனாய்வு செய்யும் வழிமுறைகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை அல்லது இந்த வகையான பணிகளுக்கு அறிவியலைப் பயன்படுத்தும் விதத்திலும் எவ்வித மேம்பாடும் தெரியவில்லை. ஊரகப் பகுதிகளிலுள்ள காவல் நிலையங்களிலோ நகர் புறங்களிலுள்ள காவல் நிலையங்களிலோ அறிவியல் அடிப்படையிலான புலனாய்வுக்கான எவ்வித வசதிகளும் இருப்பதில்லை” என்றுதான்.

தேசியக் குற்றங்கள் பதிவுத் துறையின் புள்ளிவிவரக் கணக்கெடுப்பிலிருந்து நாம் அறிய வருவது இதுதான்: பாலியல் பலாத்காரக் குற்றங்களைப் பதிவு செய்வதற்காக மேலும் மேலும் அதிக அளவில் பெண்கள் காவல் நிலையங்களை அணுகுகின்றார்கள். ஆனால் மிகக் குறைந்த அளவில்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கின்றது.

1973ம் ஆண்டுதான் தேசியக் குற்றப்பதிவு அலுவலகம் (WCRB) முதன் முதலாக பாலியல் பலாத்காரம் பற்றிய புள்ளி விவரத்தை வெளியிட்டது. அந்த வருடத்தில் இந்தியா முழுவதிலும் 2919 வழக்குகள் காவல் நிலையங்களில் பதிவுக்கு வந்தன. 2010ம் ஆண்டில் பலாத்கார வழக்குகள் பதிவானது 20262 ஆக உயர்ந்தது. இவ்வழக்குகளில் தண்டிக்கப்பட்ட எண்ணிக்கையோ ஆண்டுக்கு ஆண்டு மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. காரணம் மிகத் தெளிவானதும் சுருக்கமானதும்தான். “இந்தியாவின் குற்றங்கள் வெளியாகி அறுபது ஆண்டுகளில் காவல்துறை வழக்குகளில் புலனாய்வுத் திறமைகள் வெகுவாகக் குறைந்து போய்விட்டது என்பதுதான் அது. பலாத்காரம் என்பது ஒரு பெரும் குற்றமாகப் பார்க்கப்படாத மனோநிலையில் மாற்றம் எதுவும் நிகழாததும் ஒரு காரணம் ஆகும்.

## குறைந்த புலனாய்வு என்பது என்னவென்றால் நீதி கிடைக்காது என்பதாகும்:

சாட்சியங்களை சரியாகப் புலனாய்வில் உட்படுத்தும் திறமை குறைந்து நீதி கிடைக்காமல் போய்விடத்தான் வழிவகுக்கும். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தப்பிப்பது மிகவும் நடந்திடும் என்பதை நன்கு உணரலாம். உதாரணமாக, கொலைக் குற்றத்திற்கான தண்டித்தல் என்பது கூட வெகுவாகக் குறைந்திருக்கிறது. அதாவது 44.28 சதவீதமாக 1973ல் இருந்தது 2010ம் ஆண்டு 36.73 சதவீதமாகக் குறைந்திருக்கிறது.

கொலைக் குற்றம் மற்றும் வீடு புகுந்து கொள்ளையடித்தல் போன்ற குற்றங்களுக்கு அதிகமான வழக்குகளில் தண்டனை கிடைப்பதற்கான காரணம் புலன் விசாரணை மற்றும் சாட்சியங்கள் கிடைப்பதுதான் என்று வழக்கறிஞர்கள் கூறுகின்றனர். “புலன் விசாரணை என்பது சாட்சியங்களைச் சுற்றிச் சுழல்வதாகத்தான் இருக்கிறது”

என்று டில்லியிலுள்ள வழக்கறிஞர் ரெபக்கா ஜான் கூறுகின்றார். ‘‘பலாத்காரம் போன்ற குற்றங்களில் சாட்சியங்கள் என ஒன்றுமே கிடைப்பதில்லை’’ என்று மேலும் கூறகிறார்.

கடந்த ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவர் கூறுகின்ற அத்தாட்சிச் சான்றுகளுக்கு இணைச் சான்றுகள், சாட்சிகள், தடயங்கள் போன்றவைகள் இணைக்கப்பட்டுதான் வழக்குகள் வெற்றிபெற்றிட வேண்டுமென்பதில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்லி வந்திருக்கின்றது. ஆனால், இது போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு உந்துதலாக இருப்பதில்லை என்பதுதான் வேதனையான வெளிச்சமாகும்.

1953ம் அறிக்கையை தயாரித்தவர்கள் கூறுவது கவனிக்கத்தக்கது. காவல்துறை பணிக்கு பெருமளவில் ஆட்களை எடுப்பதால், பலதரப்பட்ட பணிகளுக்கு மொத்தமாக ஆளெடுப்பு நடப்பதால் தரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு விடுகின்றது. இது பணியைப் பாதிக்கின்றது. அதாவது பணியின் தரத்தை பாதிக்கின்றது. ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் டைரக்டர் ஜெனரலும் மிகவும் திறமையான காவல் அதிகாரியுமான H.G. டோரா, ‘‘காவல்துறை வரண்டு போய்விடுமளவுக்கு நீட்சிக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகின்றேன்’’ என்று கூறகின்றார்.

பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த அவலத்தின் உண்மை எண்ணிக்கை புரியக் கூடும். 1973ம் ஆண்டிலிருந்து 1983ம் ஆண்டிற்குள் பலாத்கார வழக்கு பற்றிய புகார்கள் இரட்டிப்பாகி இருக்கிறது. ஜனத்தொகை கூடிவருவதைப் போலவே அவ்வெண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. புகார் அளிப்பது களங்கமாகக் கருதப்படுவதென்பது குறைவாயிருக்கிற மேற்கத்திய நாடுகளில் கூட நீதிமன்றத்தில் சென்று வருத்தப்படுவதைவிட அமைதியாய் தனக்குள்ளேயே வருத்திக்கொள்வது மேல் என்று பாதிப்படைந்த பலர் நினைக்கிறார்கள். அமெரிக்க ஒன்றிய நாட்டினில் 1991ல் நடந்த ஒரு கணக்கெடுப்பின்படி பலாத்காரம் பற்றி வந்த புகாரின் விகிதம் 55 சதவீதமாகும். அதேபோல் 1985ல் நடந்த கணக்கெடுப்பின்படி பாலியல் பலாத்காரம் 38 சதவீதம் என்று கூறுகின்றது.

2000ம் ஆண்டு நடந்த ஒரு தேசிய ஆய்வு, யு.கே. நாட்டில் பெண்களில் 4.9 சதவிதத்தினர் ஏதேனும் ஒரு வகையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுகின்றனர் என்று கூறுகின்றது. அயர்லாந்து, சுவீடன் மற்றும் ஜெர்மனியில் நடந்த தனித்தனி ஆய்வுகள் கூறுவதென்னவென்றால், அதிக எண்ணிக்கையிலான பெண்கள் அதாவது 25 சதவீதம் முதல் 34 சதவீதம் பெண்கள் பாதிப்புள்ளாகிறார்கள் என்பதாகும். இதுபோன்ற தேசிய அளவிலான ஆய்வுகள் இந்தியாவில் நடத்தப்படவில்லையென்றாலும் கூட 2007ல் நடந்த அரசாங்க ஆய்வு அறிக்கையின்படி 53 சதவீதப் பெண் குழந்தைகள் பங்கெடுத்துக் கூறியது, ஒன்று அல்லது பல பாலியல் தொந்தரவுகளை அனுபவிக்கின்றனர் என்பதாகும்.

தேசியக் குற்ற எண்ணிக்கை அலுவலகம் (NCRB) கூறிய புள்ளி விவரம் ஒன்று, ஏன் இத்தகைய குற்றங்களில் அமைதி காக்கப்படுகின்றது என்று கூறுகின்றது. அது என்னவென்றால் பாலியல் பலாத்காரம் செய்பவர்களில் பலர்

## பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்டவருக்கு குறைந்தபட்ச நீதி

| | அந்த ஆண்டில் கவால்துறையால் புதிதாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | சிறையில் அல்லது பிணையில் உள்ள மொத்த நபர்கள் – விசாரணை நிலுவையிலுள்ளது | பாலியல் பலாத்காரம் செய்தவர்களின் வழக்கு விசாரணை முடிந்த நிலை | சமரசம் செய்யப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் | தண்டனை பெற்றவர் | தண்டனை பெற்றவர் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| இந்தியாவில் குற்றங்கள், 1973: பாலியல் பலாத்காரம், கொலை | 2919<br>10754 | 4991<br>26978 | 1511<br>9725 | 26<br>207 | 669<br>4584 | 44.28<br>47.14 |
| இந்தியாவில் குற்றங்கள் 1983: பாலியல் பலாத்காரம் கொலை | 6019<br>25112 | 10716<br>174202 | 5985<br>45773 | 102<br>291 | 2204<br>18318 | 36.83<br>40.02 |
| இந்தியாவில் குற்றங்கள் 1993: பாலியல் பலாத்காரம் கொலை | 12218<br>38240 | 38178<br>125843 | 6293<br>19206 | 137<br>303 | 1907<br>7958 | 30.30<br>41.43 |
| இந்தியாவில் குற்றங்கள் 2003: பாலியல் பலாத்காரம் கொலை | 15913<br>36929 | 70197<br>179680 | 13107<br>27666 | 361<br>395 | 3423<br>9433 | 26.12<br>34.10 |
| இந்தியாவில் குற்றங்கள் 2010: பாலியல் பலாத்காரம் கொலை | 20262<br>35531 | 97078<br>176057 | 14263<br>22820 | 149<br>84 | 3786<br>8383 | 26.54<br>36.74 |

## முக்கியமாகக் கண்டறிந்தவைகள்

- சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் பெண்ணுரிமைப் பிரசாரங்கள் தொடர்ந்து நடைபெற்றும் பாலியல் பலாத்கார வழக்குகளில் தண்டனை தரப்படுவது 1973ம் ஆண்டிலிருந்து வெகுவாகக் குறைந்து கொண்டேதான் வந்திருக்கின்றன.
- கொலைக் குற்ற வழக்குகளிலும் தண்டிக்கப்படுவது குறைந்துகொண்டே வந்தாலும் நீதிமன்றங்கள் பாலியல் பலாத்காரத்தைவிட கொலைக் குற்றத்தில் தண்டித்தலில் முனைப்புக்காட்டுவது குற்றவியல் நீதி அமைப்பில் பாரபட்சம் உள்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது.
- பெருமளவில் பெண்கள் தன்மீது நிகழ்ந்த பாலியல் பலாத்காரத்தைப் பற்றிப் புகார் கொடுக்க முன் வந்தாலும் விசாரணை நடத்துவதில் மிகப்பெரும் பின்னடைவைக் காண முடிகிறது. இந்த எண்ணிக்கையின் பின்விளைவு அபாயகரமான அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

நெருங்கிய நண்பர்களாகவும் உறவினர்களாக இருப்பதும்தான் என்று சொல்லப்படுகின்றது. ஊடகங்கள் இதுபற்றி நாடகத்தனமாக யாரென்று அறிய முடியாத மனிதர்கள் என்று அறிக்கைவிட்டாலும் நான்கு மாநிலங்கள் தவிர்த்து எல்லா மாநிலங்களிலும் 10ல் 9 நபர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரிந்த நபர்களால் நடத்துவிக்கப்படுகின்றது என்று தெரிய வருகின்றது. டில்லியில் இந்த எண்ணிக்கை 96.6 சதவீதமாகும்.

தெரிந்தவர்களால் நடத்தப்படுகின்ற இந்த பலாத்காரப் புகார்களில் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டவர்களின் வாக்கு மூலங்களையோ அல்லது சாட்சியங்களின் வாக்கு மூலங்களையோ வற்புறத்தி திரும்பப் பெற வைக்க பெரு முயற்சிகள் நடைபெறுகின்றன. 2010ல் இங்ஙனம் தங்களின் பாதுகாப்பில் இருந்தவர்களை அல்லது ஜாமீனில் வெளியே வந்தபோது நடந்தது என்பது எண்ணிக்கையில் 89707 ஆகும். இது 1973ம் ஆண்டின் எண்ணிக்கையான 4991 என்பதைவிட எவ்வளவு அதிகம் என்பதும் நீதிமன்றக் காத்திருப்பு எவ்வளவு அதிகம் என்பதையும் உணர்த்தும்.

### வடகிழக்குப் பகுதி இதில் சேராததாகும்:

காவல்துறையைப் பொறுப்பேற்க வைப்பது மற்றும் விரைவு விசாரணை போன்றவை மட்டும் நல்ல முடிவைக் கொண்டுவந்துவிட முடியாது. NCRD புள்ளி விவரம் கூறும் பிறிதொரு விவரம் என்னவென்றால் பெண்களின் சமூக அந்தஸ்து முடிவுகளில் சில மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பதுதான். இந்த வழக்குகளில் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது, வடகிழக்கு மாநிலங்களில்தான். இங்கெல்லாம் கல்வி, சத்துணவு மற்றும் ஆண் / பெண் விகிதாச்சாரம் போன்றவை உயர்வாக இருந்தது கவனிக்கத் தக்கது.

நாகாலாந்து 73.7 சதவீதம் பாலியல் பலாத்காரம் செய்தவர்களைத் தண்டித்தது. அருணாச்சல பிரதேசம் மற்றும் சிக்கிமில் 66.7 சதவீதமும் மேகாலயாவில் 44.14 சதவீதம் மற்றும் மிசோரமில் 96.6 சதவீதம் தண்டிக்கப்பட்டனர். மிசோரமில் வசிக்கும் 10,00,00 நபர்களில் 9.1 நபர்கள் காவலில் புகார் செய்தனர் என்பதாகும். இது சமூக நிர்பந்தம் பாலியல் வழக்குகளை கருத்தூன்றி கவனிக்க வைக்கின்றது என்பதாகும்.
சிலர் சட்டங்கள் நல்ல விதமாக உருவாக்கப்பட்டால் இந்தப் பிரச்சனைக்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கின்றனர். அப்படிக் கூறிவிட முடியாது. கனடா நாட்டு பாலியல் பலாத்கார சட்ட சீர்திருத்தங்கள் பற்றி விமர்சித்துக் கூறிய ஜூலியன் ராபர்ட்ஸ் மற்றும் ராபர்ட் ஜிபோட்டிஸ் கூறுவதாவது: இத்தகைய சீர்திருத்தங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டவர்களை புகார் அளிக்க தூண்டுமேயல்லாமல் சட்ட அமைப்பினை மாற்றிவிடாது என்பதாகும். 1986ல் வெளிவந்த "மேல் சட்ட விமர்சனம்" ஒன்றில் சூசன் எஸ்டிரிச் / கூறுகிறார்" குறிப்பிட்ட நீதித்துறையில் மாற்றங்களை கொண்டுவர வேண்டுமேயல்லாது பாலியல் வழக்குகளை கையாளும் விதத்தில் பெரிய மாறுதலை காணமுடியாதென்கின்றனர்.

இந்தியாவில்தான் இப்பிரச்சனை இருக்கின்றது என்பதில்லை. இங்கிலாந்து நாட்டில் கூட தண்டிக்கும் 5.7 சதவீதத்தை உயர்த்துவதற்காக அரசு பாடுபட வேண்டியிருக்கின்றது. இந்தியாவில் விசாரணைக்கு வந்த வழக்குகளில் 33 சதவீதம்தான் தண்டனை பெற்றுத் தந்துள்ளது.

உண்மையில் உலகத்தில் கண்டறியத் தேவையான உபகரணங்கள் உள்ளது. ஆனால், மனோ பாவம்தான் பிரச்சனையை அணுகுவதற்கு தேவைப்படுகின்றது. இந்தியவில் அதுதான் மிகக் குறைவாக உள்ளது. ஆனால், விவாதத்திற்கு குறைவில்லை.
நீடித்த பிரச்சாரங்களும் சட்ட மாறுதல்கள் இருந்தும் கூட தண்டிக்கப்பட்ட தீர்வு என்பது குறைந்து கொண்டேதான் வருகின்றது

**(தேவேஷ் பாண்டே மற்றும் பிந்து சாஜன் பெரப்படான் தந்த தகவல்களிலிருந்து )**

**ஆதாரம்: *The Hindu* (11.3.2012)**

# ஆம்னேஸ்டி இன்டர்நேஷனல் அறிக்கை 2011
# உலகின் மனித உரிமைகள் நிலை

## இலங்கை

### *ஜனநாயக சோசலிச குடியரசான இலங்கை*

| | |
|---|---|
| அரசின் தலைமை | – மகிந்தா ராஜபக்சே |
| மரண தண்டனை | – செயல்பாட்டில் |
| ஜனத்தொகை | – 20.4 மில்லியன் |
| வாழ்நாள் | – 74.4 வருடங்கள் |
| 5 வயதுக்குக் கீழ் (ஆண் / பெண்) (1000க்கு) | – 21 / 18 |
| வயது வந்தோர் கல்வி | – 90.6 சதவீதம் |

இலங்கை அரசு முன்னர் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு உரிய வகையில் தண்டனை வழங்கத் தவறிவிட்டது. அத்தோடு மக்கள் காணாமல் போவதும் சித்ரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அரசு அதிகாரிகள் சுதந்திரமாக மக்கள் பேசுவது, கூடுவது, அமைப்புகள் போன்றவற்றுக்கு கடுமையாகத் தடைவிதிக்கிறார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை விடுதலைப் புலியோடு தொடர்பு இருப்பதாக சந்தேகப்பட்டு சிறைகளில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு அமைப்புகளுக்கும் இடையில் நடந்த சண்டை 2009 மே மாதத்தில் முடிவுக்கு வந்து இரு தரப்பினர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆம்னெஸ்டி இன்டர்நேசனல் சுதந்திரமான சர்வதேச ஆய்வு ஒன்று நடத்துமாறு வேண்டியுள்ளது.

**பின்னனி:** 26 வருட அமைதியான தேர்தல்களில் மகிந்தா ராஜபக்சே இரண்டாம் முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக தேர்தலில் நின்ற ராணுவத் தலைவரான சரத் பொன்சேகா தேர்தல் முடிந்ததும் கைது செய்யப்பட்டுள்ளார். ராணுவத்தில் பணியிலிருக்கும்போதே அரசியலில் ஈடுபட்டதாகவும் ஆயுதத் தளவாடங்கள் வாங்கியதில் ஊழலில் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு 30 மாதம் சிறை தண்டனை செப்டம்பரில் விதிக்கப்பட்டு உள்ளது. சரத் பொன்சேகா மீது இலங்கை ராணுவச் செயலாளர் சரணடைந்த விடுதலைப் புலிகளை கொல்லுமாறு மே 2009ல் ஆணையிட்டதாக உள்ளூர் செய்தித் தாளில் பொய்யான செய்தி வெளியிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். பத்திரிகையாளர்களும், யூனியனைச் சேர்ந்தவர்களும் எதிர்கட்சிகளை ஆதரிப்பவர்களாக தேர்தலுக்கு பின் நடந்த கொந்தளிப்பால் சந்தேகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளர் பான்–கி–மூன் இலங்கையில் நடந்த நிகழ்வுகளுக்கு பதில் சொல்லும் பொறுப்பு குறித்து தனக்கு ஆலோசனை வழங்க வல்லுநர் குழு ஒன்றை ஏற்படுத்துமாறு அறிவித்துள்ளார். இதை எதிர்த்து இலங்கை அதிபர் ராஜபக்சே எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு தற்காலிகமாக கற்றுக்கொண்ட மற்றும் சரி செய்யும் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார். இது 2002–ல் நடந்த போர் நிறுத்தம் குறித்து ஆராயும் என்று சொன்னாலும் விதிமுறைகளில் ஏற்கெனவே நடந்த மனித உரிமைமீறல் விசயங்கள் குறித்து எந்த தகவலும் இல்லை. ஐரோப்பிய சந்தைக்கு செல்வதற்கு இலங்கைக்கு ஆகஸ்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஐக்கியநாடு சபையின் மாநாட்டில் ஐரோப்பிய கமிசன் ஏற்படுத்திய மூன்று விதிகளை அரசு செயல்படுத்திடவில்லை என்பதாகும்.

ஏப்ரலில் நடந்த தேர்தலின் முடிவு, அதையொட்டி ஏற்பட்ட காபினெட் பதவிகள், ராஜபக்சே குடும்பத்தினருக்கு அதிகாரம் அளித்திட ஏற்பட்ட சட்டங்கள் 90க்கு மேற்பட்ட அமைப்புகள் மற்றும் முக்கிய அமைச்சரவை கட்டுப்படுத்தின. செப்டம்பரில் நடந்த அரசமைப்புச் சட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்தி அதிபரின் பதவிக் காலத்தை இரண்டு முறைக்கு மேலும் தொடர்வதை அனுமதித்ததோடு மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புகளின் முக்கிய பதவிகளை அதிபர் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர அனுமதித்தது. இந்த முக்கியப் பதவிகளில் தேசிய காவல் கமிசன், மனித உரிமைக் கமிசன் மற்றும் நீதித்துறை கமிசன் போன்றவைகளும் அடங்கும்.

அரசு அதிகாரிகள் மனித உரிமை நிறுவனங்களையும் மற்றும் தனி மனித பார்வையாளர்களையும் நாட்டில் பார்வையிட, ஆய்வு செய்ய மறுத்து வருகிறார்கள். அக்டோபரில் ஆம்னெஷ்டி இன்டர்நேசனலின் மனித உரிமை கண்காணிப்பு மற்றும் சர்வதேச நெருக்கடிக்கான குழு இலங்கை அரசு அமைப்பின் அழைப்பை ஏற்று பார்வையிட மற்றும் ஏதும் கூறிட மறுத்துவிட்டது. காரணம் என்னவென்றால் சாட்சிகளை பாதுகாக்கும் பொறுப்பு மற்றும் சுதந்திரமாக செயல்படும் விதம் போன்றவற்றுக்கு

உத்தரவாதம் வழங்கப்படாமை போன்றவைதான்.

**உள்நாட்டிலேயே மக்கள் இடமாற்றம் செய்யப்படுதல்:**

ஏறத்தாழ 20000 முதல் 30000 மக்கள் ஆயுதப் போர் 2009க்கு பிறகு அரசின் வடக்கு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். இவ்விடங்களில் சுகாதாரச் சீர்கேடுகள், மிகுந்துள்ளன என்பதோடு அந்நிலையே தொடர்கிறது. இவ்விடங்களில் குவிக்கப்பட்டுள்ள மக்களை வேறிடங்களுக்கு அனுப்பவோ மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யவோ இலங்கையின் இராணுவ அமைச்சகம் ஏதும் ஏற்பாடுகள் செய்யவில்லை. இந்த கேம்ப்களில் இருந்து வெளியேறிய மிகப்பல குடும்பங்கள் நிலையற்ற சூழ்நிலைகளில் வாழ்வதோடு சாப்பாட்டிற்குக் கூட யாரையேனும் எதிர்பார்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. பத்தாயிரம் குடும்பங்கள் தங்களை ஆதரிக்கும் குடும்பங்களிலும் 1400 குடும்பங்கள் தற்காலிக முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**அரசு ஆதரவுடன் செயல்படும் ஆயுதந்தாங்கிய குழுவினரின் மனித உரிமை மீறல்கள்:**

ஆயுதம் தாங்கிய குழுவினர் அரசின் ஆதரவோடு இலங்கையில் செயல்படுகின்றனர். இவர்கள் விமர்சனம் செய்பவர்களை தாக்குவது கூட்டங்கூட்டமாக மக்களை கடத்தி வேறிடத்துக்கு அனுப்புவது, மக்களை காணாமல் போக்கிவிடுவது மற்றும் கொன்றுவிடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

- மார்ச் மாதத்தில் முந்தைய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேம சந்திரன் ஈழ மக்களின் ஜனநாயக கட்சியைச் (EPDP) சேர்ந்தவர்கள் 17 வயதான திருச்செல்வம் கபில்தேவ் என்பவரை ஜாப்னாவில் கொன்றதாகக் குற்றம்சாட்டியுள்ளார். இறந்தவரின் நண்பர்கள் EPDP–ஐ பற்றி கூறியவற்றை இலங்கை காவல்துறை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதை சுரேஷ் பிரேம் சந்திரன் கூறியதோடு கொலை செய்தவர்களை பாதுகாப்பதற்குக் காரணம் தொடர்ந்து வந்த பாராளுமன்றத் தேர்தல்தான் என்றார்.

**கட்டாயத்தால் காணாமல் போக வைக்கப்–பட்டவர்கள்:**

பாதுகாப்புப் படையால் கட்டாயப்படுத்தப்பட்டு காணாமல் போக வைக்கப்பட்டவர்கள் மற்றும் தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் இலங்கையின் பல பகுதிகளில் நடந்தது. எனினும், மிகக் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலும் கொழும்பிலும் மிக அதிகமாக நடந்தது. நூற்றுக்கணக்கில் விடுதலைப் புலிகளை சார்ந்தவர்கள் காணாமல் போகடிக்கப்பட்டதாக – அதாவது அவர்கள் 2009–ல் இராணுவத்திடம் சரணடைந்த பின்பு நடந்திருக்கிறது என்றும் அதற்கான பதில் முகாந்திரம் எதுவுமில்லை என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

- LCRC கமிசனிடம் ஆகஸ்டு மாதத்தில் நேரில் சாட்சி சொன்ன பெண் ஒருவர் தன் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் (அதில்) இரண்டு குழந்தைகளோடு மே 2009ல் இராணுவத்திடம் விடுவக்கல் பகுதியில் சரணடைந்ததாகவும் அப்படி சரணடைந்தவர்களை 16 பேருந்துகளில் முல்லைத்தீவு சாலையில் கொண்டு சென்றதாகவும் கூறினார். அவர்களனைவரையும் அடைத்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் தேடியும் எவரையும் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறினார். சரணடைய ஊக்குவித்த இரண்டு பாதிரிமார்கள் கூட காணக் கிடைக்கவில்லை.

**சட்டத்தின் அடிப்படையில்லாமல் கைது செய்யப்பட்டவர்களும் அடைத்து வைக்கப்–பட்டவர்களும்:**

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழிக்கும் சட்டத்தை (PTA) மற்றும் நெருக்கடி நிலை பிரகடன விதிமுறைகளை வைத்துக் கொண்டு, இவ்விரண்டு அரசு அதிகாரிகளுக்கு ஏராளமான அதிகாரங்களை வழங்கி கைது செய்ய மற்றும் சந்தேகத்தினடிப்படையில் அடைத்து வைக்க, சுற்றி வளைத்திட செய்கின்றது. இது வழக்கமான சட்டப் பாதுகாப்புடன் செய்யும் கைது மற்றும் அடைத்து வைத்தலுக்கு எதிரானதாகும். ஏப்ரலில் ஆம்னெஸ்டி இன்டர்நேசனல் இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்திடம் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை அகற்றுமாறு கேட்டுக்கொண்டது.

இது 1971ம் வருடத்திலிருந்தே தொடர்ந்து கேட்டுக் கொள்ளப்–பட்டதோடு பயங்கரவாத தடுப்புச்சட்டம் (PTA) மற்றும் பாதுகாப்பு சம்மந்தப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை விலக்கிடுமாறும் கேட்டுக்கொண்டு வந்துள்ளது. மே மாதத்தில் அதிகாரிகள் சில ஒழுங்கு விதிகளான பேச்சுரிமைக்கு தடை மற்றும் அமைப்புகள் மீதான சில தடைகளை விலக்கினாலும் பிற சட்டங்களின் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

LTTE எனும் விடுதலைப் புலிகளோடு தொடர்புடையதாகச் சொல்லி ஆயிரக் கணக்கில் மக்கள் பிடித்து அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது எந்தவித குற்றப்பத்திரிகைக் அல்லது விசாரணையோ நடத்தப்படாமல் “மறுவாழ்வுவிடங்களில்” இப்படி அடைத்து

வைக்கப்பட்ட 11000 மக்களில் ஏறத்தாழ 6000 பேர் சட்டத்தினடிப்படையிலன்றி அடைத்து வைக்கப்–பட்டுள்ளதோடு இவர்களுக்கு வழக்கறிஞர்களை தொடர்பு கொள்ளவோ நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லவோ அல்லது ICRC இடம் செல்லவோ வழியின்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள். பலர் இந்த வருடத்தில் தம் குடும்பத்தினரை வட பகுதிகளில் இரகசியமாக அடைத்து வைத்துள்ளதாகவும் அதற்கான சாட்சியங்களும் உள்ளதாகவும் கூறுகிறன்றனர். அதிகாரிகள் 700 முதல் 800 வரையிலான நபர்களை விடுதலைப் புலிகளில் மிகக் கொடுமையானவர்கள் என்று சொல்லி அடைத்து வைத்திருக்கின்றனர்.

இவர்களை தனியாக விசாரித்து தண்டிக்க வேண்டுமென்று அடைத்து வைத்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் காவல்துறையினரால் தென் பகுதிகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயங்கரவாத தடுப்புச்சட்டம் மற்றும் நெருக்கடி நிலைப் பிரகடன விதிமுறைகளின் கீழ் காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். சிலர் எண்ணில்லா வருடங்கள் இப்படி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். மிகப் பெரும்பாலானவர்கள் தமிழர்கள், சிலர்தான் சிங்களவர்கள்.

- அக்டோபர் மாதத்தில் நான்கு சிங்கள ஆண்களின் சார்பாகப் பேசிய வழக்கறிஞர் ஒருவர் தம் கட்சிக்காரர்களை, இவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் எந்தவித குற்றப்பத்திரிகையும் சமர்பிக்காது ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக அடைத்து வைத்திருப்பதாகக் கூறினார். இந்த ஆண்கள் தொழிற்சங்க அங்கத்தினர் 25 மற்றும் பத்திரிகையாளர்களும் ஆவர். இவர்கள் 2007 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டனர். பின்னர், இவர்கள் காவல்துறை விசாரணைப் பிரிவின் கீழ் காவலர் மீதான பயங்கரவாதத்தின் விதிப்படி (TID) அடைத்து வைக்கப்பட்டனர். இவர்களில் 21 பேர் எவ்வித குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படாமல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## சித்ரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுதல்:

காவல்துறை மற்றும் இராணுவத்தினர் அடைத்து வைத்திருப்பவர்களை மோசமாக நடத்துவதும் சித்ரவதை செய்வதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இப்படி பாதிக்கப்படுபவர்கள் விடுதலைப் புலிகளோடு தொடர்பிருப்பதாக சந்தேகப்படப்படும் தமிழர்களும் மற்றும் சாதாரண அல்லது அற்பக் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களும் ஆவர். இம்மக்களில் பலர் காவல் சித்ரவதை காரணமாக உயிரிழந்திருக்கின்றனர்.

- ஜனசன் சதாயா என்னும் ஒரு இலங்கை NGOவிடம் உள்ள வீடியோ சாட்சியத்தில் சமரசிங்கே புஷ்பகுமாரா என்பவர் தன்னை நவம்பர் 10ம் தேதி அடைத்து வைத்ததாகவும் பீருவாலா காவல்நிலையத்திலிருந்து வந்த ஒருவர் வாகன ஓட்டுநராக வேலை கேட்க வந்ததுபோல் நடித்து பின்னர் கொள்ளையடித்ததாக கூறி கைது செய்தனர் என்றார். மேலும் அவரை அடித்து துன்புறுத்தியதோடு போதை மருந்துகள் மற்றும் வெடிகுண்டுகள் வைத்திருந்ததாக குற்றஞ் சுமத்துவோம் என்று பயமுறுத்தியதோடு கொன்றுவிடுவோம் என்றும் மிரட்டினர் என்றார். கண் இரண்டையும் குருடர் போலாக்கி இரண்டு நாட்கள் படுக்கையிலேயே கட்டி வைத்து பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலேயே விடுதலை செய்துவிட்டனர். தன்னை எப்படி இதுவரை நடத்தினார்கள் என்பதை வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்டி அனுப்பினார்கள்.

## நீதிமன்ற உத்தரவின்றி மரணதண்டனை:

மோதல் சாவுகளாகவும் அல்லது தப்பித்துச் சென்றபோது கொன்றதாகவும் போலீஸ் தரப்பில் தொடர்ந்து சொல்லப்படுகின்றன. இதுபற்றி அறிக்கைகள் சொல்வது போலவே போலீஸ் வழக்குகளிலும் சொல்லப்படுகின்றன.

- போலீஸ் காவலில் நடந்த சாவு என்பது செப்டம்பரில் சுரேஷ் குமார் (மட்டலேவைச் சேர்ந்தவர்) மற்றும் ரான்முகேஜி அஜித் பிரசன்னா (எம்பிலிபித்தியர்வை சேர்ந்தவர்கள்) மற்றும் ஹன்ன வெள்ளாவைச் சேர்ந்த தம்முள்ள அரசிகிஜி லட்சுமணன் என்பவர்கள் கொல்லப்பட்டதை ஆசிய மனித உரிமைக் கமிசன் என்னும் NGO அறிக்கையாக வெளியிட்டிருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரின் வழக்கிலும் காவல்துறை சொல்வது என்னவென்றால், ஆயுதங்களை அடையாளம் காட்ட கூட்டிச் சென்றபோது தப்பி ஓட முற்பட்டதால் சுட்டுக்கொல்ல வேண்டியதாயிற்று என்பதுதான்.

## தண்டனை விலக்கு:

இராணுவம், காவல்துறை மற்றும் பிற அரசு அலுவலக அமைப்புகள் மூலம் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய அறிக்கைகள் வெளியாவதில் எந்தவித முன்னேற்றமும் கிடைக்கவில்லை. நீதிமன்ற வழக்குகளிலும் இதே நிலைதான். முன்னேற்றம் எதுவுமில்லை. ஆயுதந்தாங்கிய போர் நடந்து இறுதி பகுதியை அடைந்தபோது சர்வதேச மனிதத்

தன்மையுடனான சட்ட விதிகள் மீறப்படும் விதமாக இலங்கை இராணுவமும் மற்றும் சிவில் அதிகாரிகளும் நடந்து கொண்டார்கள். இக்கலகம் அல்லது சண்டை மே 2009ல் முடிவுக்கு வந்தது. இவ்வாறு நடைபெற்றது என்பதை ஒத்துக்கொள்ளாமல் இலங்கைப்படை மறுத்ததோடு சிவில் சமூகத்தில் ஒருவர் கூட காயம் அடையவில்லை என்று பொது அறிக்கைகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஜுலை 6ம் தேதியன்று இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலகத்தை முதன்மைச் செயலாளர் பான் கி–மூன் மூடியது தன் வல்லுநர் குழுவை திருப்பிப் பெற்றுக் கொண்டது. இதுகுறித்து இலங்கை அமைச்சர் விமல் வீரவன்சா நடத்திய போராட்டம் வெறும் தோல்வியில்தான் முடிந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் தம் உறவினர்களை இலங்கை ராணுவம் கைது செய்த பின்பு அவர்கள் காணாமல் போய்விட்டதும் பின் அவர்களைப் பற்றிய எந்தவிதத் தகவல்களும் கிடைக்காதது குறித்தும் LLRC நடத்திய வடக்கு மற்றும் கிழக்கு இலங்கை கூட்டங்களில் சாட்சியம் கூறினர். இந்தக் கூட்டங்கள் ஆகஸ்டு மாதத்தில் துவங்கி நடந்து வருகின்றன. கமிசனரிடம் சிலரால் பேச முடிந்தது. இந்த சாட்சியம் கூறியவர்கள் போட்டோ எடுக்கப்பட்டு அவர்கள் மிரட்டப்பட்டதைப் பற்றிய அறிக்கைகள் உள்ளன. கமிசனின் இடைக்கால அறிக்கை உபயோகரமான சிபாரிசுகளை முன்வைத்துள்ளன. அந்த சிபாரிசுகள் அடைத்து வைக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அவசியமென்பதை வலியுறுத்துகின்றன. மேலும் பொது மக்களின் துன்பங்களை வெளிப்–படுத்துகின்றன. இருந்த போதிலும் இந்தக் கொடுமைகளை செய்தவர்கள் பதிலுரைக்க வேண்டிய கடமையைப் பற்றி இவ்வறிக்கை சொல்லத் தவறிவிட்டன.

மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் என்று சந்தேகப்பட்டவர்கள் தொடர்ந்து அரசின் பொறுப்பான பதவிகளில் இருந்து வரவே செய்கிறார்கள்.

நவம்பர் மாதத்தில் அரசு செய்த விசாரணையில் விடுதலைப் புலிகள் இராணுவ வீரர்களைக் கொன்றுவிட்டதாகக் கூறப்பட்டது. இது இராணுவம் கிளி நொச்சியை நோக்கி முன்னேறிச் சென்றபோது நடந்ததாகக் கூறப்படுகிறது. அதே சமயத்தில் இராணுவப் படைகள் சிவிலியன் மக்களை கொன்றது மற்றும் சிறைப் பிடித்தவர்களை கொன்றது குறித்து எழுந்த குற்றச்சாட்டுகளை மறுக்கவே செய்து வருகின்றது.

### மனித உரிமைப் பாதுகாவலர்கள்:

மனித உரிமைப் பாதுகாவலர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதோடு தாக்கப்படுகின்றனர். இவர்களை தொடர்ந்து பிடித்து வைப்பது மற்றும் மிரட்டப்படுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

- கம்யூனிட்டி டிரஸ்ட் பண்டு எனப்படும் இலங்கை தொண்டு நிறுவன (NGO) தலைவரான பட்டாணி ரசீக் என்பவர் பொள்ளநருவா என்னும் நகரத்திலிருந்து கிழக்கிலுள்ள வாளைச் சேனை என்னும் நகருக்குச் செல்வதற்காக பயணம் செய்தபோது பிப்ரவரி 11ல் காணாமல் போய்விட்டார். அவருடைய குடும்பத்தினர் இதுபற்றி புட்டாலம் நகரிலுள்ள உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அங்குதான் அவர் வசித்து வந்தார். இலங்கை மனித உரிமைக் கமிசன் வசமும் இதுகுறித்த புகார் அளிக்கப்பட்டது. ஆனால், அவர் எங்கிருக்கிறார் என்ற தகவல் கிடைக்கவேயில்லை. அரசியல் தொடர்புடையவர்களால் இது நடந்தது என்பது பெரும்பாலும் நம்பப்படுகின்றது.

### பத்திரிகையாளர்கள்:

பத்திரிகையாளர்கள் அரசு சம்மந்தப்பட்டவர்களாலும் அரசின் ஆயுதந்தாங்கிய அமைப்புகளாலும் தாக்கப்படுவதும், தொந்தரவுக்குட்படுவதும் நடைபெற்று வருகின்றது. இப்படிச் செய்பவர்களை மற்றும் தாக்குதலை குறித்து நீதிக்கு முன் நிறுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படுவதில்லை.

பிரகீத் ஏக்நலிகோடா என்பவர் இலங்கை அரசை வெளிப்படையாக விமர்சித்து வந்தார். அவரை ஜனவரி 24ம் தேதியிலிருந்து காணவில்லை. ஜனவரி 26ல் நடைபெறவிருந்த தேர்தல் குறித்து ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதி வந்தார். அதில் அரசின் எதிராளியான பொன்சேகாவை ஆதரித்து எழுதப்பட்டிருந்தது. போலீஸ் ஆய்வுகள் அவர் காணாமல் போனது குறித்து எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. ஆட் கொணர்வு ரிட் மனு அளித்த அவர் குடும்பத்தினருக்கு உயர்நீதிமன்றம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தாமதம் செய்து வருகின்றது.

மே மாதத்தில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன்படி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் முதன் முதலாக கைது செய்யப்பட்ட பத்திரிகையாளரான ஜெ.எஸ். திசை நாயகத்தை மன்னித்து விடுதலை செய்கின்றது என்று வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து செய்யப்பட்ட மனுவின் காரணமாக ஜனவரி மாதம் ஜாமீனில் வெளிவந்தார். ஜுன் மாதத்தில் இவர் இலங்கையிலிருந்து வெளியேறினார்.

# என்கவுன்டர் கொலையை புகழும் போஸ்டர்!

வங்கிக் கொள்ளையர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 பேர் சென்னை வேளச்சேரியில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை வானளாவப் புகழ்ந்தும் முறையான விசாரணை கோருவோரைக் கண்டித்தும் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருப்பதில் காவல் துறையின் தூண்டுதல் இருக்கக் கூடும் என்று ஐயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாநிலத்தைச் சேர்ந்த 5 பேர் கடந்த 22ந் தேதி அதிகாலையில் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. தற்காப்புக்காகவே சுட நேர்ந்தது என்று காவல்துறை ஆணையர் திரிபாதி அறிவித்துள்ள நிலையில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த உண்மை அறியும் குழுவினர் இது குறித்து ஆய்வு மேற்கொண்டனர். மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் அ.மார்க்ஸ், பிரபா, கல்விமணி, கோ.சுகுமாறன், மதுமிதா தத்தா, நிர்மலா கொற்றவை, வழக்கறிஞர்கள் ரஜனி, மனோகரன், சையது அப்துல் காதர், பத்திரிகையாளர் சங்கர ராமசுப்பிரமணியன், எழுத்தாளர் சந்திரா ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் ஆணையர் தெரிவித்த கருத்துகளுக்கும், மக்கள் தெரிவித்த தகவல்களுக்கும் இடையே பல முரண்பாடுகள் இருப்பதாக குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நள்ளிரவில்தான் தகவல் அறிந்து குறிப்பிட்ட இடத்திற்கு சென்றதாக ஆணையர் கூறியுள்ளார். ஆனால் இரவு 10.30 மணியளவிலேயே காவல் துறையினர் வந்துவிட்டதாகவும், கதவுகளை மூடி விளக்குகளை அணைக்குமாறு எச்சரித்ததாகவும் பொதுமக்கள் கூறியுள்ளனர். இப்படிப்பட்ட முரண்பாடுகள் பற்றி கேட்டபோது, நீதிபதி விசாரணை உள்ள நிலையில் பதில் கூற இயலாது என்று கூறினார். மற்ற கேள்விகளுக்கு விரிவாக பதிலளித்த அவர் இந்த கேள்விக்கு மட்டும் நீதிபதி விசாரணையைக் காரணமாகக் கூறி பதிலளிக்க மறுத்திருப்பது அவரிடம் இதற்கு பதில் இல்லை என்பதையே காட்டுகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தாக்குதல் நடந்த வீட்டில் துப்பாக்கிச் சண்டை நடந்ததற்கான அடையாளங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. நீண்ட நேரம் துப்பாக்கி சண்டை நடந்த சத்தம் கேட்டதாக பொதுமக்கள் சொல்லவில்லை. கொல்லப்பட்டவர்கள் தங்கியிருந்த வீட்டு வசதிவாரிய வீடு ஒற்றைப்படுக்கையறை கொண்டதேயாகும். கிட்டத்தட்ட ஒரு பொந்தில் அடைபட்ட எலிகளைப்போல இருந்த அந்த ஐவரையும் காவல்துறையினர் முற்றுகையிட்டு, தேவைப்பட்டால் ஒரிரு நாட்கள் முற்றுகையை நீடித்து உயிருடன் பிடித்திருக்க முடியும். அதிரடிப் படையைக் கொண்டு ஒரு சிலரையாவது பிடித்திருக்க முடியும் அப்படி உயிருடன் பிடித்திருந்தால் பல உண்மைகள் மக்களுக்கு தெரிய வந்திருக்கும்.

கைது செய்யப்பட வேண்டியவர்கள் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனைக்குரிய அளவுக்கு மட்டுமே குற்றங்களைச் செய்திருந்தால் மட்டுமே அவர்களை, தற்காப்பு கருதி கொல்லலாம் என அரசமைப்பு சாசன தண்டனைச் சட்ட 463 பிரிவு கூறுகிறது. இந்த வழக்கில் கொல்லப்பட்டவர்கள் சந்தேகத்திற்குரியவர்களே. அவர்கள் ஐவரையும் கொன்றது சட்டரீதியில் ஏற்புடையது அல்ல.

அவ்வாறு கொலை நிகழும்போது அது கொலை வழக்காவே பதிவு செய்யப்பட வேண்டும். கொலையைச் செய்தவர் இந்திய சாட்சிய சட்டத்தின்படி (105) தற்காப்பிற்காகவே அவ்வாறு செய்ய நேர்ந்தது என்பதை நீதிமன்றத்தில் நிறுவ வேண்டும். போலி மோதல் கொலைகளில் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்கலாம் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளதையும் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

உலகமயச் சூழலில் மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்து பிழைக்கச் செல்வது அதிகரித்துவரும் நிலையில், வட மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வந்து பல்வேறு வேலைகளில் ஈடுபட்டு கடுமையான சுரண்டலுக்கு உள்ளாகி வருவோர் அனைவரையும் குற்றப்பரம்பரையினர்போல நடத்துவது முறையல்ல. பல்வேறு பகுதிகளில் இத்தகைய தொழிலாளர்கள் காவல் நிலையங்களுக்கு கைரேகைப் பதிவு உள்ளிட்ட சோதனைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இது முறையல்ல என்றும் குழுவினர் கேட்டுக்கொண்டனர்.











*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*

***Human Rights Advocacy and Research Foundation (HRF)***

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 22353503, 044 22351919 Fax : 044 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*